# காதல் காதல்

மேக்னேஷ் திருமுருகன்

1

# மதன்

‘மச்சி ! ஒரு பொண்ணு பஸ்ல உன்ன பாக்குதுனு வச்சிக்கோயேன் . அவள நீ அடிச்சி போட்ட மாதிரி பாக்கனும் . அவ பாக்கறப்போலாம் நீ அவ கண்ணையே பாத்துட்டு இருக்கனும் . தப்பித்தவறி அவ பாக்கற நேரத்துல நீ அவள பாக்காம வேற எங்கயாச்சும் வேடிக்க பாத்தனு வச்சிக்கோ , அவ்ளோ தான் . அதுக்கப்றம் நீ தலகீழா

நின்னா கூட அவ உன்ன பாக்கமாட்டா . அதே மாதிரி அவ கண்ண மட்டும்தான் பாக்கனும் . வேற எங்கயும் பாக்கக்கூடாது . முக்கியமா அவ கழுத்துக்கு கீழ தப்பித்தவறி கூட உன் கண்ண ஓடவிட்றாத . ' என்று தன்னுடைய அட்வைஸ்களை அள்ளிவீசினான் கண்ணன் . இந்த அறிவுரைகளில் ஒருவார்த்தை விடமால் மனப்பாடம் செய்துகொண்டிருந்த மதனுக்கு காதல் வந்துவிட்டது என்று தனியாக சொல்லவேண்டுமா ?

'அப்றம் மச்சி '

கண்ணனின் அடுத்தகட்ட அட்வைஸ்களில் மெய்யுருகி தவித்தவாறே கேட்டான் மதன் .

‘அப்பறம் , பொண்ணுங்களுக்கு பஸ்ல கமெண்ட் அடிக்கறது ரொம்ப பிடிக்கும் . ஆனா பிடிக்காதமாதிரியே சிணுங்குவாங்க . அட் த சேம் டைம் , அவங்கள கலாய்க்கற மாதிரி கமெண்டக்கூடாது . அவங்க கிட்ட நாம கெஞ்சுறமாதிரி தான் பேசனும் .’

‘அது எப்படி மச்சி ?’

‘அது ரொம்ப சிம்பிள் மச்சி . எப்பவும் உன் பக்கத்துல உன்னவிட மொக்கையான பசங்களையே வச்சிருக்கனும் . அவ உன்ன பாக்கற நேரம் , என்னப்பா இப்போலாம் கண்டுக்கவே மாட்டேன்ற ?, அச்சோ உன்னோட கண்ணாலயே என்ன கொன்னுடுவ போல இருக்கே ! இந்த மாதிரி

அந்த பொண்ண பாத்துட்டே உன் பக்கத்துல இருக்க ஃப்ரண்டுகிட்ட பிட்டு போடனும் மச்சி . அதேநேரம் உன் பக்கத்துல க்ரௌட மட்டும் அண்டவிட்ராத. நீ ரொமான்டிக்கா பேசுற டயலாக்ஸ்லாம் உல்டா பண்ணிவிட்ருவாய்ங்க . மறந்துடாத மச்சி . நீ போட்ற பிட்டு நல்லா கடல்ல போடற நங்கூரம் மாதிரி வலுவா இருக்கனும் . புரியுதா ?'

ம் ம் என்று பசுமாடு கணக்காய் தலையை ஆட்டிவிட்டு அஞ்சேகால் 68 பஸ்சுக்காக காத்திருந்தான் . மனதெல்லாம் அவளிடம் பேசப்போகிற டென்சனில் இருந்தவனுக்கு கண்ணனின் அறிவுரைகள் பிராக்டிகல் மார்க்கைப்போல் கைக்கொடுத்தது எனலாம் . 14 வயதினில் தாய் , தந்தையை இழந்த மதனுக்கு எல்லாமே அவனுடைய மாமன்

தான் . பத்தாவது முடித்ததும் எப்படியெப்படியோ அடித்து பிடித்து ஒரு பாலிடெக்னிக்கில் எலக்ட்ரானிக்ஸ் டிப்ளமோ பிரிவில் சேர்த்துவிட்டார் அவனுடைய மாமா . வழக்கம்போல கல்லூரி முதல் வாரத்தில் முதல் பெஞ்சில் தன்னுடைய படிப்புக் கனவுகளை அடுக்கிக்கொண்டே அமர்ந்தவன் அடுத்த வாரத்திலேயே கடைசி பெஞ்சிற்கு தெரித்து ஓடும் நிலைக்குத்தள்ளப்பட்டான் . கடைசி பெஞ்ச்சிற்கு உரித்தான சிகரெட் , சரக்கு போன்றவைகளை சரியாய் ஒரு செமஸ்டருக்குள் கற்றுத்தேர்ந்து அதில் அவுட்ஸ்டான்டிங் ஸ்டூடன்ட் ஆகிவிட்டான் . ஒருமுறை அரைத்தூக்கத்தில் இருந்த மதனை எழுப்பிய புரபசர் ஒரு கேள்வியைக்கேட்டு அவனை மடக்கமுயல , அவனோ தட்டுத்தடுமாறி காதல்கொண்டேன் தனுஷ்

மாதிரி விடையளித்து தேவியை மடக்கிவிட்டான் . புதுத்தோழியாய் அறிமுகமான தேவி , பின்னாளில் மதனின் பைனான்சியர் ஆனாள் . மதனின் மாமாவிற்கு இவன்மேல் இருக்கும் பாசமளவிற்கு , அவனுடைய அத்தைக்கு இல்லை . பெரும்பாலான நாட்கள் காலையில் சமைக்கமாட்டார்கள் . பசியுடன்தான் திரிவான் . அவனுக்கும் சேர்த்து சாப்பாடு எடுத்துவந்த தேவி , மதனை மகன்போல் நடத்தினாள் . திடுதிப்பென ஒரு நாள் 'I LOVE YOU ' என்று அவள்சொல்லிவிட , அதேநேரம் இவனின் ஆரூயிர்த்தோழன் கண்ணன் அவளைக்காதலிப்பதாய் இவனிடம் சொல்ல , நட்புக்காக அவளைத்தியாகம் செய்தான் .

இதோ கல்லூரி இறுதி ஆண்டு . இன்று அவனுக்குள் பதட்டமும் படபடப்பும் கொஞ்சம் அதிகமாய்த்தானிருந்தது . காலையில் அவளை மட்டும் பார்த்திராமல் இருந்திருந்தால் இப்பிரச்சனையே வந்திருக்காது . வெள்ளைநிறச்சுடிதாரில் , ஆங்காங்கே பிங்க் கலர் பூக்களும் , அதற்கு மேட்சாக வெள்ளைக்கலர் சாலும் மின்ன , சந்தன நிறத்தில் பெரும் அழகாய் காட்சியளித்துக்கொண்டிருந்தாள் அவள் . பஸ்ஸில் நிறைந்திருந்த கூட்டமும் வேர்வை நாற்றமும் தாண்டி அவளின் கருங்குழலில் இருந்த பிங்க் நிற ரோஜா , அவள் தாக்கியதுபோலவே இவனின் நாசியைத்தாக்கியது . மெல்ல திரும்பியவளின் முகத்தைப்பார்த்த நொடி , அவ்வளவு அழகாய் அவனைக்கடந்தது எனலாம் . கரும்நிறத்தில் விழும் அருவிபோலிருந்த

அவளின் கூந்தல் நேர்த்தியாய் பின்னப்பட்டு , வகிடு எடுத்து சீவப்பட்டிருக்க , இருபுருவங்களுக்கும் இடைபட்ட இடத்தில் ஒரு கருநிற ஸ்டிக்கர் பொட்டும் , , அதற்கு கொஞ்சம் மேல் சிவன்கோயில் திருநீறும் இருந்தது . தங்கத்தால் ஆன ஜிமிக்கி , இவளால் அழகாய்த்தெரிந்தது அவனுக்கு . பெண்களுக்கு சாதரணமாகவே கண்கள் கவர்ந்திழுக்கும்படியாய் இருக்கும் . இவளுக்கு சொல்லவா வேண்டும் . நல்லவேளை , பஸ்ஸாக இருந்ததால் அவளின் உதட்டைப்பார்த்துவிட்டு மட்டும் வந்தான் . என்ன செய்ய ? தேனிருக்கும் மலரைத்தேடி வண்டு வரத்தானேச்செய்யும் . இவளின் காந்த சிரிப்பை படிக்கட்டில் இருந்தவாறே பார்த்தவன் , அடுத்தநிமிடமே இரும்புத்துகளாய் அவளிடம் சென்றடைந்தான் . அவளின் அழகில்

கால்பங்கை ரசிப்பதற்குள் பஸ் ஸ்டாண்ட் வந்துவிட , வேறுவழியே இல்லாமல் அவளின் பின்னாலயே சென்று அவளின் காலேஜைக்கண்டுபிடித்தான் .

அதன்பின் கண்ணனுக்கு போன்செய்து காலேஜை கட் அடித்துவிட்டு வர சொன்னான் .

'எந்த காலேஜ் மச்சி ?'

'டிபிடி பாலிடெக்னிக் டா . பர்ஸ்ட் இயர் ஜாய்ன் பண்ணிருக்கா . இன்னும் என்ன டிபார்ட்மென்ட்னு தெரில .'

‘பொண்ணு பேரு மச்சி ?’

‘தெரில டா . அவள இன்னைக்குக்காலைல தான் பார்த்தேன் . சான்ஸே இல்ல மச்சி . சண்டாளி , கண்ணாலயே கொல்றா மச்சி . என்னால முடில மச்சி . அப்படியே சுர்ருனு ஏறுது . ஓடிப்போய் எதிருல வருதுபாரு , அந்த பைக்க அப்படியே எட்டி ஒதைக்கனும்னு தோனுது . ’ என்று புலம்ப ஆரம்பித்தவனிடம் கண்ணன் அன்றைய நாள்முழுதும் மாட்டி வதைபட்டுக்கொண்டிருந்தான் .

‘மச்சி ! நீ என்ன பண்ணுவியோ எனக்குத்தெரியாது . உன் தங்கச்சிய கரெக்ட்

பண்ண ஒரு வழி சொல்லு .' என்று சாயங்காலம் பஸ்ஸூக்கு காத்திருந்த கண்ணனிடம் மதன் கேட்டபின்தான் தன்னுடைய அட்வைசை பொழிந்தான் .

காலையிலிருந்து புலியைப்போல் இருந்தவன் , அவள் வந்தபின் அப்படியே எலியானான் . கண்ணன் மட்டுமல்ல , அங்கிருந்த கல்லூரி மாணவர்கள் பலரின்கண் அவள்மேல்தான் இருந்தது . அவளோ இவர்கள் யாரையும் மதிக்காமல் அவளின் தோழியுடன் சிரித்து பேசிக்கொண்டிருந்தாள் . டீக்கடையில் தம்மடித்துக்கொண்டிருந்த ஒரு இளைஞன் இவளைப்பார்த்ததும் பார்க் செய்திருந்த பைக்கை எடுத்து எட்டுபோட்டு படம் ஓட்டிக்கொண்டிருந்தான் . ஒவ்வொருத்தனும் தங்களின் அடிமையாய் இருக்கும்

நண்பர்களிடம் தங்களின் அதீத பாசத்தைக்காட்டிக்கொண்டிருந்தனர் .

‘மாப்ள . ஆக்சுவலா இந்த எக்சாம்லாம் எனக்கொரு சப்ப மேட்டுருடா ’ என்றான் ஒருவன் . ‘ஹே டூட் . ஐ யம் கோன்னா பை எ நியூ ஐ போன் ’ என்றான் ஒருவன் . ‘என்னடா பஸ் இது ? நேரநேரத்துக்கு வரவே மாட்டேங்குது . நாளைல இருந்து கார்லயே வரபோறேன் மச்சி’ என்றவாறு ஒவ்வொருவனும் அவனுடைய நண்பர்களிடம் கத்தி சொல்லிக்கொண்டிருந்தனர் .இன்னும் சிலரோ அவளை விழுங்கிவிடுவதுபோல் பார்த்துக்கொண்டிருந்தனர் . தனித்து இருந்த இளைஞர்களோ , இவளை கண்டும் காணாததுபோல் தங்களின் ஜெல்போனை எடுத்து அம்பானி ரேஞ்சுக்கு நோண்டி கொண்டிருந்தனர் . அவர்களை எல்லாம் பார்க்கும்போது காண்டின் உச்சத்திற்கே

சென்றுவிட்டான் மதன் . மதனை ஓரளவு சமாதான படுத்தியவாறு ஆறுதலாய் உடனிருந்தான் கண்ணன் .அந்நேரத்திற்கு பஸ் வரவும் , பெண்கள் எல்லாம் முன்னால் ஏற , ஆண்கள் எல்லாம் பின் வாயிலில் ஏறினார்கள் . மதன் வேகவேகமாய் பஸ்ஸினுள் புகுந்து அவள் இருக்குமிடத்தை அடைந்தான் . பதட்டத்தை ஓரங்கட்டியவாறே அவளிடம் பேசத்துணிந்து வாயெடுக்கும்முன் அவளே பேசினாள் .

‘அண்ணா ! கொஞ்சம் பின்னாடி தள்ளி நில்லுங்கணா . எல்லாரும் நெருக்கறாங்க . ப்ளீஸ் ’

2

# காதல்மையல்

ஓய் குயில்களே ! உங்களுக்கு போட்டியாக ஒருத்தி வந்துவிட்டாள் என்று உரக்கக்கூற நினைத்த மதனுக்கு 'அண்ணா' என்ற வார்த்தை நாராசமாய் அவன் காதில் ஒலித்துவிட்டது . இவ்வளவு அழகான நாளில் இப்படியொரு கொடூரமான வார்த்தையைக்கேட்க கூடும் என்று அவன் அறிந்திருந்தால் நிச்சயம் மாலைவேளையில்

அந்த பேருந்தினுள் ஏறியிருக்கவேமாட்டான் . அவனுக்குள் சுர்ரென்று கோவம் உச்சந்தலைக்குள் ஏறியிருந்தது .

‘அண்ணா ப்ளீஸ் . தள்ளி நில்லுங்க’ என்று மறுபடியும் அவள் கூறியபோது வெடித்தே சிதறிவிட்டான் .

‘யாருடீ உனக்கு அண்ணன் ? அப்படியே பளார்னு விட்டன்னு வச்சிக்கோ , அவ்ளோதான் .’

‘நா என்ன தப்பு பண்ணேன் . எதுக்கு திட்ரிங்க ’ என்று கண்கலங்கியவாறே அவள்

கேட்டாள் . பாவம் , அந்த 18 வயது மங்கைக்கு கல்லூரியின் முதல்நாளன்று யாரென்றே தெரியாத ஒருவனிடம் திட்டு வாங்கியது அதிர்ச்சியையும் சிறிது கலக்கத்தையும் உண்டாக்கிவிட்டது .

'நீ ஒரு வெங்காயமும் பண்ணல . எல்லாம் என் தப்பு தான் . இன்னொரு தடவ அண்ணானு சொன்ன , மூஞ்சு மொவரையெல்லாம் பேத்துடுவேன் .' என்றவாறே திரும்பி வேகவேகமாய் எதிரில் இருக்கும் கூட்டத்தை விலக்கியவாறே படியை நோக்கி கிளம்பினான் மதன் . மதனின் நிலையைக்கண்டு அங்கிருந்த போட்டி கோஸ்டியினருக்கு உள்ளுக்குள் ஆனந்தம் ஏற்பட , இன்னும் சிலருக்கு நாம தப்பித்தோம் என்று ஆத்வாசப்பட்டுக்கொண்டிருந்தார்கள்

.

‘டே கண்ணா ! இறங்கு டா .’ என்று கூறியவாறே கண்ணனின் பதிலை எதிர்பாராமல் அடுத்த நிறுத்தத்தில் வேகவேகமாய் இறங்கி , எதிரில் தென்பட்ட டீக்கடையை நோக்கி நடந்தான் மதன் .அவனுக்குள் கோவம் கொப்பளித்துக்கொண்டிருந்தது . படுபாவி மகள் , ஒரு கொடுவாளை எடுத்து கழுத்தை வெட்டியிருந்தால் கூட சிரித்தவாறே இறந்திருப்பான் . ஆனால் வார்த்தையால் வதைத்துவிட்டாளே என்று மனதினுள் அழுதவாறே ஒரு சிகரெட்டைப்பற்ற வைத்தான் .

‘என்ன மச்சி ஆச்சு ?’ என்ற கண்ணனின் கேள்விக்கு பத்துநிமிடம் கழித்து பதில் கூறினான் .

‘இல்ல மச்சி ! இவ செட் ஆகமாட்டா . ’

‘ஏன்டா ? அவளுக்கு புடிக்கலையா ?’

‘இல்ல மச்சி . அவ என்ன அண்ணானு சொல்லிட்டாடா ’ என்று தொண்டை தழுதழுக்க கூறினான் . கிட்டத்தட்ட அழுதுவிடும் நிலையில் இருந்தான் . கண்டிப்பாய் வீட்டை அடைந்ததும் அவனுடைய படுக்கை கண்ணீரால்

நனையப்போவது உறுதி .

‘விடு மச்சி . இவளாம் ஒரு ஆளு . அவ மூஞ்சப்பாத்தியா ? நல்லா வெள்ள எலிக்கு பவுடர் பூசுன மாதிரி . குள்ளக்கத்திரிக்காயாட்டம் இருந்துகிட்டு ஓவர் சீனு போடுறா மச்சி . நா அப்பவே வேண்டாம் விடுடானு சொல்லிருப்பேன் . உனக்கு மனசு கேக்காதுனு தான் விட்டுட்டேன் ’ என்றான் கண்ணன் .

அப்போதைய வார்த்தைகள் ஓரளவு மதனுக்கு ஆறுதலாக இருந்திருக்கும் . அடுத்த பேருந்து வந்தபின் அதில் ஏறிய மதனுக்கு வீட்டைச்சென்றடையும் நேரம் எல்லாம் முழுக்கவனமும் அவள் அண்ணா

என்று கூறிய அந்த ஒரு வினாடியில் மாத்திரமே இருந்தது . ச்சே ! நாம இன்னைக்கு அவகிட்டபோயிருக்கவேகூடாது . அவசரப்பட்டுட்டோம் . அவ மட்டும் என்ன செய்வா ? முன்னபின்ன தெரியாத ஒரு பையன அண்ணானு சொல்லாம மாமானா சொல்லுவா ? அவமேல தப்பு இல்ல . அவளும் காலைல நல்லா பார்த்தாளே ! அப்பறம் எதுக்கு அண்ணானு சொல்லிருப்பா ? ஒருவேள என்ன புடிக்கலையோ ? எல்லாத்துக்கும் காரணம் எங்கப்பா தான் . அவரு மாதிரியே என்னோட தலையும் கொஞ்சம் வழுக்கையா இருக்கறதால தான் அவளுக்கு நம்மள புடிக்கல . இதுபோன்று ஏதேதோ நினைத்துக்கொண்டே வீட்டை அடைந்தான் . மற்றநாட்களில் வீட்டினுள் எல்லாரையும்
சிரிக்கவைத்துக்கொண்டிருந்தவன் அன்றைய

தினம் மௌனமாய் தன்னுடைய அறையினில் முடங்கிக்கிடந்தான் . இதுமாதிரியான துன்பகர தினம் ஒருநாளும் அவனுக்கு இருந்தது இல்லை . ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாய் மனதினுள் விதைத்துக்கொண்டான் . வாழ்வு அவளோடு தான் .

அடுத்தநாள் மீண்டும் வேகவேகமாய்க்கிளம்பி அவள் பயணிக்கும் அதேபேருந்தில் ஏறினான் .நேற்றைய தினம் அவள் மட்டும் அப்படி இவனை அழைக்காமலிருந்தால் அவளின் வீடுவரை சென்றிருப்பான் . அவனுக்கென்று கடைசி படியில் சிறிது இடவிட்டு 'வா தல' என்ற ஜூனியர் மாணவர்களின் மரியாதையை கண்டுகொள்ளாமல் உள்ளே நுழைந்தான் .

எப்போதும் கடைசிப்படியில் மட்டுமே பயணிப்பவன் முதல்முறையாய் உள்ளே நுழைவது , கண்டக்டர் உட்பட அவனை அறிந்த அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது . அவளைப்பார்த்ததும் பல கால்களை மிதித்து , சிலரைத்தள்ளியவாறே உள்ளே நுழைந்தான் . அவள் நின்றுகொண்டிருந்த இடத்தை அடுத்த ஒருநிமிடத்தில் அடைந்தான் . நேற்று அவளை சைட் அடித்துக்கொண்டிருந்த அதே முகங்கள் இன்றும் தத்தம் இடத்தில் தென்பட்டன .இன்றைய தினம் வெள்ளைநிற சுடிதார் , ஆனால் மெல்லிய நீலநிறப்பூக்களுக்குள் தனது தங்கத்தை , சாரி அங்கத்தை மறைத்திருந்தாள் . ஆனால் நேற்று பார்த்திருந்த பொலிவான முகம் அவனுக்குக்காட்சியளிக்கவில்லை . மாறாய் இரவு முழுதும் துயில் கொள்ளாத

களையிழந்த முகம்தான் காணப்பட்டது . நேற்றைய சிரிப்பொலி இன்று அவளிடம் இல்லை . அவளுடைய தோழிகள் மாத்திரம் ஜாலியாய் கதையடித்துக்கொண்டிருந்தார்கள் . அவர்களுக்குள் பெரும்பாலான பேச்சுகள் தங்களை எவனெவன் எப்படியெல்லாம் சைட் அடிக்கிறார்கள் என்பதைப்பற்றியே இருந்தது . கண்ணன் கல்லூரிக்கு கிளம்ப இன்னும் ஒருமணிநேரம் ஆகிவிடும் என்பதால் , மதன் அவனில்லாமல் சோலோவாய் அவளை நெருங்கினான் .

‘அப்றம் . எந்த காலேஜ் நீங்கலாம் ?’ என்றவாறே அவளின் தோழிகளைப்பார்த்துக்கேட்டான் மதன் .

‘டிபிடி ணா . நீங்க ?’ கொஞ்சம் உடல்பூசினாற்போல் அதேநேரம் வழவழவென வாயாடிக்கொண்டிருந்தவள் இவனின் கேள்விக்கு பதிலளித்தவாறே கேள்வியை எழுப்பினாள் .

‘நா சென்ட்ரல் பாலிடெக்னிக் . என்ன டிபார்ட்மென்ட் ?’

‘நாங்க நாலுபேரும் சி.எஸ் , இவ மட்டும் இ.சி.ஈ ’ என்றாள் அவள் . தன் மனதுக்கு பிடித்தவள் , தான் நினைத்தவாறே கம்ப்யூட்டர் சயின்ஸ் எடுத்திருப்பது அவனுக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை .

‘இளம்பிள்ளையா நீங்க ?’

‘ஆமாங்ணா . எப்படி கண்டுபிடிச்சிங்க ?’

‘லென்ஸ் வச்சி கண்டுபிடிச்சேன் .’

‘அண்ணா ! ச்சும்மா ஓட்டாதிங்க .’

‘நீங்க என்ன காரா ? பைக்கா ? ஓட்ரதுக்கு .’

‘ஹலோ ! நாங்க ஓட்டுனா நீங்க

தாங்கமாட்டிங்க .'

'நா ரெடிப்பா . நல்லா ஓட்டுங்க .'

பின் மொக்கையாய் தொடர்ந்த உரையாடல்கள் ஜாலியாய் மாறத்துவங்கியது . மதனிடம் வரிக்குவரி வாயாடியவள் பெயர் மாலினி என்பதும் , ஓரமாய் எலும்புந்தோலுமாய் இருந்தவளின் பெயர் வைதேகி எனவும் , இன்னொருத்தி பெயர் ரம்யா எனவும் தெரிந்துகொண்டான் . பதிலுக்கு இவனின் பெயரையும் அவர்கள் தெரிந்துகொண்டார்கள் . இவர்களின் பேச்சை முயற்சியின்றி கேட்பதுபோலிருந்த அவள் , தன்னிடம் இவன் பேசமாட்டானா என்பதுபோல் சிறிது ஏக்கத்துடன் பார்த்தாள் .

‘அப்றம் மாலினி . உன்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட் பேர சொல்லாம விட்டுட்ட ?’ என்றவாறு அவளின்மேல் தன் பார்வையைத்திருப்பினான் . அவள் முகத்தில் சிறிது வெட்கமும் , நிறைய ஆவலும் இருந்தது .

‘ஓ இவளா ? இவ பேரு மையல் விழி . ’ என்ற மாலினி .

அடுத்தநொடியே

'ஹலோ ! என் பேரு மதன் . நைஸ் டு மீட் யூ மையல் . உங்க பேரு செமையா இருக்கு ' என்றான் .

அவள் பதிலேதும் கூறாமல் தலையைக்குனிந்தவாறே சிரிப்பை உதிர்த்தாள் .

'என்ன உங்க ப்ரெண்ட் பேசமாட்டாங்களா ? பாவம் ஊமை போல ?'

'சீச்சீ . அப்படியெல்லாம் இல்ல . அவ ஒரு பயந்தாங்கொள்ளி . யார்கிட்டயும் அவ்வளவா பேசமாட்டா . பத்தாததுக்கு நீங்க வேற நேத்து

அவள திட்டிவிட்டுட்டிங்க . அதான் ' என்றாள் மாலினி .

'ம் . ஹேே மாலினி . நீயே சொல்லுப்பா . நீ ஒரு பையனா இருந்து , இவள பாத்து பேசலாம்னு நீ வர . திடீர்னு உன்ன இவ அண்ணானு சொன்னா நீ என்ன செய்வ ?'

'சப் சப்புனு ரெண்டு அர விட்ருப்பேன்ணா .'

'அடடா ! நா கொஞ்சம் சாஃப்டா ஹேண்டில் பண்ணிட்டேன் மாலினி . நீ சொல்ற மாதிரி ரெண்டு அர விட்ருக்கனும் ' என்ற மதனை ஒரு நொடி நிமிர்ந்து பார்த்து முறைத்தாள்

மையல் . அவளின் கண்கள் ‘விடுவ விடுவ . அது வரைக்கும் என் கை என்ன பூப்பறிச்சிட்டு இருக்குமா ?’ என்பதுபோல் அவனிடம் பேசியது .அதற்குள் பேருந்து நிலையம் வந்துவிட அனைவரும் இறங்கி பை அண்ணா என்று உதட்டின்மூலம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு சென்றனர் . மையல் மாத்திரம் ஒருமுறை திரும்பி பை என்பதுபோல தலையசைத்துவிட்டு செல்ல , மதனுக்கு மையல் மேல் காதல்மையல் கொண்டது .

# 3

# காந்தவிழிகள்

அன்றைய நாள்முழுதும் மதன் , கண்ணனிடம் அன்றுநடந்த நிகழ்ச்சிகளை மிகைப்படுத்திக் கூறியவாறே இருந்தான் . இவனின் காதலைப்பற்றி கேள்விபட்ட தேவி , மதனைவிட அதீத சந்தோஷத்தில் மிதந்தாள்

. தனக்குப்பிறகு மதனைப்பார்த்துக்கொள்ள ஒருத்தி கிடைத்துவிட்டாள் என்கின்ற நினைப்பே அவளுக்கு ஒரு பெரும்சுமையையும் கவலையும் தீர்த்துவைத்தது போலிருந்தது . அவளும் தனக்குத்தெரிந்த டிப்ஸ்களை மதனிடம் கூறிக்கொண்டே இருந்தாள் .

'டேய் மதன் . அவளுக்கு உன்ன பிடிச்சிருக்கு . அதுனால தான் அவ உன்ன திரும்பி பாத்தா . இனிமேல் தான் ஜாக்ரதையா இருக்கனும் . எப்பவும் பொண்ணுங்க கிட்ட கோவத்தமட்டும் காட்டிடாத . இனிமேல் இந்த மாதிரி கன்றாவியா ட்ரஸ் பண்ணாத . நல்ல டீசென்டா , ஜென்யூனா ட்ரஸ் பண்ணு . இது என்னடா பெர்ஃப்யூம் ? நல்லாவே இல்ல . பார்க் அவென்யூ ஸ்மெல்லாம் எந்த

பொண்ணுக்கும் பிடிக்காது . ஃபா மாத்திக்கோ . குங்குமம் இட்டா உனக்கு எவ்ளோ அழகா இருக்கும் தெரியுமா ? இனிமேல் குங்குமம் வச்சிகிட்டே வா . அப்றம் தப்பித்தவறி தம் அடிச்சிட்டு அவ பக்கம் போய்டாத . ' என்று தேவி ஏதேதோ கூறியவாறு இருந்தாள் . இதெல்லாம் ஏற்கனவே அவள் கூறியிருந்தாலும் , அப்போதெல்லாம் கேட்காத மதன் , இப்போதுமட்டும் அவள் கூறவதையெல்லாம் சிரத்தையுடன் கேட்டுக்கொண்டான் . ரேடியோ அலைகள் பற்றி பாடம் நடந்துகொண்டிருந்தபோது , இவனுடைய மனதில் காதல் அலைகள் ஓடிக்கொண்டிருந்தன . சீக்கிரம் 4.30 மணி ஆகாதா ? ஓடிப்போய் பஸ் ஸ்டான்டில் காத்திருக்கக்கூடாதா என்றவாறு எண்ணிக்கொண்டிருந்தான் . நாலரையிலிருந்து ஐந்து வரை கால்வலியே

தெரியாமல் நின்றுகொண்டிருந்தான் . காதல்வலி ஆட்கொண்டிருக்கும்போது கால்வலி மாத்திரம் எப்படி தெரியும் ?

மையல் எனும் காதல்புயல் பஸ் ஸ்டாண்டில் மையம் கொண்டுவிட்டாள் என்பது அங்கிருக்கும் இளவட்டங்களின் சிகையலங்காரம் மற்றும் காத்திருப்புகளைவைத்தே அறிந்துகொள்ளலாம் . அவள் வந்ததும் வழக்கம்போல சிலகூத்துகளை , பல யூத்துகள் நடத்திக்கொண்டிருந்தனர் .காலையில் மாலினி மற்றும் சகதோழிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை ஓரளவு வெற்றிகரமாக முடிந்ததால் அடுத்தகட்ட நடவடிக்கையை மாலையில் முடித்துவிடவேண்டும் என்ற உறுதி

மதனுக்குள் பிறந்தது . இயற்கையின் மொத்த அழகையும் குத்தகைக்கு எடுத்தவள்போல் மையல்விழி வர , வின்சென்ட் வேன் காக்கின் , டாக்டர் கெச்சட் ஓவியம்போல அவள்வரும்திசையை மதிமயங்கி பார்த்துக்கொண்டிருந்தான் . பேருந்துகளின் சத்தம் மறைந்து எங்கோ தூரத்தில் கிறிச்சிடும் சிட்டுக்குருவிகளின் சத்தம் அவன் காதுக்குள் கேட்கத்துவங்கியது. அவனுடைய கண்கள் அவளை மட்டும் ஃபோகஸ் செய்யும் தொழிலைச்சிறப்பாகச் செய்தது . அவளின் கால் சுண்டுவிரலில் புதிதாய் அடித்திருந்த ரோஜா நிற நெய்ல்பாலிஷ் கூட கவிதைகளால் வர்ணிக்கப்படவேண்டியவைதான் . அவளுக்கும் இவனைப்பார்த்ததும் தனக்குள் இருக்கும் பெண்மை ஊறிப்பெருக்கெடுக்கத் துவங்கியிருக்கவேண்டும் . நாணத்தாலோ

அல்லது பயத்தாலோ தலைகுனிந்தவாறு , அவளின் தோழிகள் பேசும் பேச்சுக்கு சிந்தியும் சிந்தாமலும் சிரிப்பை உதிர்த்தவண்ணம் பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றாள் . இன்னும் பஸ் வரவில்லை. மதன் நேராக மாலினியை நோக்கி நடந்தான் .

‘என்ன காலேஜ் போனிங்களா ? இல்ல இங்கயே ரவுண்ட் அடிச்சிட்டு இருக்கிங்களா ?’ என்றாள் மாலினி .

‘அதெல்லாம் போய்ட்டு வந்தாச்சு . இங்க எதுக்கு ரவுண்ட் அடிக்கனும் ?’

‘ஓ ! நாங்க கூட நீங்க எங்க ஃப்ரண்ட சைட் அடிக்கறதுக்காக இங்கயே நின்னுட்டு இருப்பிங்கனு நினச்சோம் ’ என்றாள் மைதிலி .

‘ஆமா ! உங்க ஃப்ரெண்ட் பெரிய கத்ரினா கைஃப் . அவங்களுக்கு வெயிட் பண்றதுக்கு .’ என்ற மதனின் விடையைக்கேட்ட மையலோ கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டாள் என்பதை அவளின் கண்கள் உணர்த்தியது .

‘ஹேய் ! வாங்கடி அங்க போலாம் .’ என்று மாலினிக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மெதுவாய்க்கூறிவிட்டு , யாருடைய பதிலையும் எதிர்பாராமல் அவள் முன்னே சென்றாள் . படக்கென்று அவளின் கையைப்பிடித்து

இழுத்தான் மதன் .அவனைப்பார்த்ததும் கோவத்தின் உச்சிக்கே சென்று அவன் கன்னத்தில் 'பளார்'ரென்று ஒரு அறை விட்டாள் . அவள் கை அவன் கன்னத்தைத்தொடும் தருணத்தில் அவளை கிராஸ் செய்து ஒரு பஸ் சென்றது . அப்போதுதான் அவள் உணர்ந்திருந்தாள் . மதன் இவளை கலாய்த்ததும் கோபத்தில் அவளின் இடப்புறம் ஹார்ன் அடித்துக்கொண்டே வந்த பஸ்சைக்கூட கவனிக்காமல் முன்னேறியிருந்தாள் . அவளை அடித்துத்தூக்க வேகவேகமாய் வந்த பஸ்ஸை கன்ட்ரோல் செய்ய உள்ளே ட்ரைவர் தடுமாறிக்கொண்டிருந்தார் .அந்நேரத்தில் மதன் உள்ளே புகுந்து அவள் கையைப்பிடித்து இழுத்து அவளைக்காப்பாற்றினான் .

அவள் அடித்ததைப்பார்த்ததும் அங்கிருந்த சிலர் மதனை கொலைக்குற்றாவாளியைப்பார்ப்பதைப்போல் பார்த்தனர் . அங்கு நடக்கவிருந்த விபத்தை அறியாதவர்கள் , அவனை பொம்பளைப்பொறுக்கி , திருட்டு நாய் என்று வாய்க்கு வந்தவாறு திட்ட , அவமானத்தால் கூனிக்குறுகினான் . இனியும் அங்கிருப்பது , நரகத்தில் இருப்பதற்கு சமம் என்றுணர்ந்தவன் அங்கிருந்து அடுத்தநொடியே காலிசெய்தான் . அவமானப்பட்டவனுக்கு கிங்ஸ் ஆறுதலை அளிக்கமுயற்சித்துக்கொண்டிருந்தது . கண்ணனும் ஆறுதலாய் அவனுடனிருந்தான் . அரைமணிநேரம் அப்படியே கழிந்தது . அஞ்சேகால் பேருந்து கிளம்பி கால்மணிநேரம் ஆகியிருக்கும் . மீண்டும் பேருந்துநிலையத்திற்குச்சென்றான் .

அடுத்தபஸ் கிளம்பிக்கொண்டிருந்தது .கூட்டமாய் இருந்ததால் தன் கையில் இருக்கும் நோட்டுகளை படிக்கட்டின் முன்னிருக்கும் சீட்டில் இருந்தவர்களிடம் கொடுத்துவிட்டு , படியில் தொங்கியவாறு தன் பயணத்தைத்துவங்கியிருந்தான் . கால்மணிநேரப்பயணம் ரோட்டில் புழுதிவீசிக்கொண்டே நன்றாக சென்றுகொண்டிருக்கும்போது , திடீரென பஸ் ஓரமாகச்செல்ல , அங்கிருந்த கருவேலமரத்தின் முட்கள் பஸ்ஸை அரக்கியது . மதன் படிக்கட்டிலிருந்து உள்ளே நுழைய முயற்சித்துக்கொண்டிருக்க

'மதன் பாத்து ! முள்ளு பட்ரப்போவுது' என்று கிரங்கடிக்கும் பெண் குரல் ஒலித்தது . அந்த குரலில் பச்சாதாபமும் பாசமும் ஒருசேரசேர்ந்து ஒலித்தது .அந்த குரலுக்கு சொந்தக்காரி மையல்தான் என்று

சொல்லவேண்டுமா ? குரல்வந்த திசையைப்பார்த்தவன் , திகைத்தான் . தனக்காக அவள் ஒரு பஸ்ஸை தவறவிட்டு அடுத்த பஸ்ஸில் காத்திருக்கிறாள் என்ற நினைப்பே அவனுக்குள் போதையை உண்டாக்கியிருக்கவேண்டும் . அவ்வளவுநேரம் மனதில் இருந்த இறுக்கமான விஷயங்கள் மாறி சுமூகமான சூழலுக்கு மனம் சென்றது . அதுவரை புழுதியாய் இருந்த பயணம் , பூக்களாய் மாறியிருந்தது . கூட்டத்தை விலக்கியவாறே உள்ளே நுழைந்து மையலின் சீட்டருகே வந்துநின்றான் . மாலினி அவனைப்பார்த்து மெல்ல சிரித்தாள் . மையலோ , அவன்முகத்தைப்பார்க்க தடுமாறினாள் .

'சாரி மையல்விழி ' என்ற மதனின் குரல்வந்த

திசையினை நோக்கி நிமிர்ந்தாள் .

‘எதுக்கு சாரி ?’

‘நேத்து உன்ன திட்டுனதுக்கு .இன்னைக்கு உன்கிட்ட அப்படி பிகேவ் பண்ணதுக்கு . ’

‘இல்ல . நாந்தான் சாரி . நேத்து உங்கள அண்ணானு கூப்டதுக்கு . அப்றம் இன்னைக்கு அடிச்சதுக்கு . ’ என்று எதிர்சீட்டை நோக்கியபடி அவனிடம் கூறினாள் .

‘பரவாயில்ல அம்மு’ என்றான் மதன் . அதைக்கேட்டதும் நிமிர்ந்து பார்க்காமல் கண்ணை மட்டும் மேலே உருட்டி , ஒரு காந்த பார்வையை வீசினாள் . அந்த பார்வையின் அர்த்தம் அவனுக்கு மட்டும்தான் புரியும் . நா உன்னோட அம்முவா ? என்று கேட்பது போலவும் போய் அந்த கத்ரினாவையே கூப்டவேண்டியதுதான ? என்ற ஆதங்கமான கேள்வியும் விழியின்வழி வினா எழுப்பினாள் .

‘என்ன அம்முனு கூப்டாதிங்க ’ என்றாள் தீர்மானமாக .

‘இல்லப்பா ! உன்பேரு ரொம்ப லென்த்தா இருக்கு . சோ நா இப்படியே கூப்டறேன் . ’

‘பரவால்ல . லென்த்தா இருந்தாலும் பேர் சொல்லியே கூப்டுங்க . ’

‘ஓ.கே . அப்றம் நம்ம மேரேஜ்கு பின்னாடியும் நா உன்னோட பேர்சொல்லிதான் கூப்டுவேன் . தங்கம் , பவுனு , செல்லம்னுலாம் கூப்டமாட்டேன் பரவாயில்லையா ?’

‘ம் பரவாயல்லை ’ என்றவள் அடடா ! அவசரப்பட்டு பரவாயில்லை என்றுகூறிவிட்டோமே என்றுணர்ந்து கண்ணை ஒருநொடி மூடி பல்லைக் கடித்து பின் கேட்டாள் .

‘என்ன சொன்னிங்க ?’

‘நா ஒன்னும் சொல்லலையே !’

‘ம் . இந்த மாதிரி எண்ணத்தோட எங்கிட்ட பழகாதிங்க . நாம ரெண்டுபேரும் நல்ல ஃப்ரெண்ட்ஸா இருக்கலாம் .’

‘ம் . சரி ’

‘ஒருவேள நீங்க எங்கிட்ட ப்ரபோஸ் பண்ணா ,

நா உங்க கிட்ட பேசமாட்டேன் .'

'ம் . சரி .' என்றவாறு அவளைப்பார்த்துக்கொண்டே இருந்தான் . மாலினியைத்தவிர பிற தோழிகள் 5.15 பஸ்ஸிற்கே சென்றுவிட்டதால் , மாலினி மாத்திரம் இவளுடன் இருந்தாள் . மதனிடம் மையல் பேச ஆரம்பித்த நிமிடங்களிலிருந்து சிறிது நேரம் அநாதையாக்கப்பட்டிருந்தாள் . அதன்பின் மௌனமாக நேரங்கள் உருண்டோட , மதனின் ஊர் அருகில் பேருந்து நெருங்கியது . ஓரளவு கூட்டமும் பஸ்ஸினுள் குறைந்தது . மதன் , மையலின் அருகினில் நெருங்கி , அவளிடமிருந்த தன்னுடைய நோட்டுகளை வாங்கினான் . 'பை பை' சொன்ன மாலினியிடம் திருப்பி ஒரு பை சொல்லிவிட்டு படிக்கட்டினருகில் சென்றான் .

முன்னால் வாயிலில்முதல் சீட்டிலேயே மாலினியும் , மையில்விழியும் அமர்ந்திருந்தபடியால் படிக்கட்டில் நின்ற மதனைக்கவனித்தபடியே இருந்தனர் . கண்டக்டர் விசிலடிக்கும் தருவாயில் மதன் , மையலிடம்

‘அம்மு ’ என்றான் . கோவமாய்ப்பார்த்த அவளின்விழிகளைப்பொருட்படுத்தாமல்

‘ஐ லவ் யூ’ என்றான் .

அவளின் கண்கள் ஆச்சரியத்தால் விரிய ‘ என்ன ?’ என்று கொஞ்சம் சத்தமாகவே

அவள் கேட்டாள் .

‘ஐ லவ் யூ சோ மச் இன் த வேர்ல்ட் ’ என்றவாறே படிக்கட்டில் இருந்து ஓடி இறங்கினான் . பஸ் ஒரு பத்துஅடி தள்ளி நின்றது . இவன் இறங்கியவாறே அவள் இருந்த திசையைப்பார்த்துக்கொண்டிருந்தான் . பஸ் பத்துவிநாடிகளில் கண்டக்டரின் விசிலுக்கு கட்டுப்பட்டு கிளம்ப , அந்நேரத்தில் ஜன்னலில் வழி , இரு அகன்ற விழி தென்பட்டன . அவ்விழிகள் ‘இரு இரு நாளைக்கு உன்ன பாத்துக்கறேன் ’ என்று செல்லமாய் மிரட்டியது . அந்த விழிகள் , மதனுக்குச்சொந்தமாகும் மையல்விழியின் காந்தவிழிகள் .

# 4

# பையன் யாரு

அன்றைய இரவு , கொசு கடிப்பதுகூட அழகாய் இருந்தது மதனுக்கு . படுக்கையில் உருண்டு புரண்டு பாழ்படித்துக்கொண்டிருந்தான் . வீட்டில் அனைவரிடமும் சம்பந்தமே இல்லாமல் சந்தோஷமாய்ப்பேசினான் .அவனின் அதீத

சந்தோஷத்தின் காரணம் புரியவில்லை . கண்ணனிடம் ஏற்கனவே பஸ்ஸினுள் நடந்த நிகழ்ச்சிகளை தெரிவித்திருந்தான் .

'மச்சி ! நாளைக்கு மார்னிங் அவ வர்ற பஸ்ல வந்துடாத . அப்படி போனா சப்புனு முடிஞ்சிடும் . அவள ஏங்க வைக்கனும் . அப்போதான் ஈவ்னிங் மீட் பண்றப்ப , செம டச்சிங்கா இருக்கும் ' என்ற கண்ணனின் அறிவுரை , மதனை வாட்டினாலும் கஷ்டப்பட்டாவது காலையில் அவளைத்தவிர்க்க வேண்டும் என்று முடிவெடுத்திருந்தான் . ஆனாலும் முடியவில்லை . மறுநாள் காலை 5 மணிக்கே குளித்து ரெடியாகி விட்டான் . கண்ணனின் பேச்சைக்கேட்பதா ? கன்னியின் பேச்சைக்கேட்பதா ? என்று

குழப்பிக்கொண்டிருந்தான் . 7 மணிக்கே பஸ் ஸ்டாப்பில் வந்துநின்றான் . தயிர்க்கூடையைத்தூக்கி கொண்டு பால் மார்க்கெட் செல்வதற்காக ஒரு கிழவி காத்திருந்தாள் . பஸ் ஸ்டாப்பில் உள்ள டீக்கடைகளில் வழக்கம்போல் வெட்டிநாயம் பேசிக்கொண்டு சிலர் இருந்தனர் . வேறுவழியே இன்றி நேரத்தைக்கடத்த தினத்தந்தியின் வரிவிளம்பரங்கள் உட்பட அனைத்தையும் படித்துக்கொண்டிருந்தான் . அவர்களிருவரும் பயணிக்கும் 8.15 பேருந்து வந்தது . அதைத்தூரத்திலிருந்து பார்த்ததும் ஓடிச்சென்று டீக்கடைக்குள் ஒண்டிக்கொண்டான் . அங்கிருந்தபடியே தன் காதலியைத்தேடியவனுக்கு அவளின் முகம் தெரியவில்லை . அவள் இருக்கிறாளா என்பது கூடத்தெரியவில்லை . ஆனால் மாலினி இருப்பது மாத்திரம் நன்றாய்

தெரிந்தது . பஸ் கிளம்பியபின் சோகமாய் அடுத்த பஸ்ஸூக்காக காத்திருந்தான் . அன்றைய தினம் வாழ்வின் ஒட்டுமொத்த வெறுமையையும் ஒன்றுகூடி இவனை வெறுத்தாற்போல ஏங்கித்தவித்தான் . கண்ணனிடம் கூட சரியாய் பேசவில்லை . அவளின் முகத்தைப்பார்த்திருந்தாலாவது சந்தோஷத்துடன் இருந்திருப்பான் . அவனை ஆட்கொண்ட அவளின் முகம் , அவனை எந்தவொரு விஷயத்திலும் ஈடுபடாமல் தடுத்து'ககொண்டிருந்தது . வேறுவழியே இல்லை என்று முடிவெடுத்தவன் மதியமே காலேஜ் காம்பவுன்டை எகிறிக்குதித்து , அவளின் காலேஜ் செல்லத் தீர்மானித்தான் . அவளின் காலேஜுக்கு எதிரே இருக்கும் பார்க்கில் அமர்ந்தவாறு நேரத்தைக்கடத்திக்கொண்டிருந்தான் . கண்ணனும் தேவியுடன் சினிமாவுக்கு

சென்றுவிட்டான் .

அப்படி இப்படி என்று நேரம்கடந்தது . எல்லாம் சிறையிலிருந்து விடுபட்ட கைதிகளாய் உற்சாகமாய் கேட்டை பிளந்து கொண்டு வந்தனர் . அவன் பெரிதும் எதிர்பார்த்தவளும் தோழிகள் படைசூழ வந்தாள் . நேராய் அவர்களுக்கருகே கிளம்பியவன்

'ஹாய் மாலினி !' என்றான் .

'ஏன்ணா காலைல வர்ல ?'

‘இல்லம்மா ! கொஞ்சம் பிஸியா இருந்ததால வரமுடியல . ஏன் , உன் ஃப்ரெண்டு ரொம்ப ஃபீல் பண்ணாலா ?’

‘ஆமாங்ணா ’ என்றாள் பரிதாபமாக . அவளின் முகம் மட்டுமல்ல , மதனின் உயிரின் முகமும் வாடியிருந்தது . கண்ணங்கள் லேசாய் வீங்கியது போன்றிருக்க , கண்களோ அழுது சிவந்தது போலிருந்தது . அதைக்கண்டவனுக்கு எப்படி இருக்கும் என்று சொல்லவா வேண்டும் ?

‘ஹேய் அம்மு ! என்னடி ஆச்சு ?’

‘ம்ஹும் . ஒன்னுமில்ல ’

‘ஹேய் சொல்லுடிங்றேன்ல ’

‘அதான் ஒன்னுமில்லனு சொல்றேன்ல .’

‘மாலினி ! என்ன ஆச்சு ?’

‘அது ’ என்று மாலினி வாயெடுக்கும்முன் அவளை ‘ஷட் அப்’ என்று முறைத்தாள் மையல் .

‘அவ கிடக்கறா . நீ சொல்லு மாலினி ’

‘காலைல ஒரு பையன் வந்து மையல மிரட்டுனான் ண்ணா . அவன இவ லவ் பண்ணனுமாம் . இல்லாட்டி நாசம் பண்ணிடுவேன் அது இதுனு மிரட்டுறான் ணா . இப்போ அவன் பஸ் ஸ்டான்ட்ல வெயிட் பண்ணிட்ருப்பான் . இவ போய் அவங்கிட்ட லவ்வ சொல்லனும்னு சொல்லிருக்கான் .’

உச்சந்தலைக்கும் உள்ளங்காலுக்கும் ஒரு மைக்ரோவிநாடியில் ரத்தம் பாய்வதுபோல வெகுன்டெழுந்த மதன் , ஒரு நிமிடம் அக்கோபத்தை அடக்கிக்கொண்டு கேட்டான்

.

‘ஹே  அம்மு . அவன நீ லவ் பண்றியாடி ?’

அவன் கேட்டதும் அவனைச் சுட்டுச்சாம்பலாக்குவது போல் தன் விழியால் எரித்தாள் . உஷ்ணம் தாங்காத மதன் , அவளிடம் நைசாக நழுவ பார்த்தான் .

‘ஹேய் மாலினி . அவகிட்ட காசு இருக்கா ?’

‘இருக்குணா .’

‘சரி . நீங்கலாம் இந்தக்கடைல ஐஸ்கிரீம் சாப்புட்டு பொறுமையா பஸ் ஸ்டான்டுக்கு வாங்க . இன்னைக்கும் நேத்து மாதிரியே 5.45 பஸ்ஸுக்கே போயிடலாம் . நா பஸ் ஸ்டாண்ட்ல வெயிட் பன்றேன் . மாலினி ! நீ மட்டும் எங்கூட வா .’

‘எதுக்குணா ?’

‘வா சொல்றேன் .’

மாலினி தயங்கியவாறே உடன் வர பஸ்

ஸ்டான்டை நோக்கி நடந்தான் . வேகவேகமாய் ஐஸ்கிரிமை விழுங்கிவிட்டு , தோழிகளையும் வேகமாய் சாப்பிடுமாறு ஆனையிட்டுக்கொண்டிருந்தாள் மையல் . பஸ் ஸ்டாண்டில் என்ன நடக்கோப்போகிறதோ என்ற பயம் வேறு அவளுக்கு . எதுக்கு இவன் மாலினிய கூட்டிட்டுப்போனான்னு தெரியலையே என்று குழம்பியவாறே சென்றடைந்தாள் . தங்களின் பஸ் நிற்குமிடத்தில் மாலினி மாத்திரம் நின்றுகொண்டிருந்தாள் . பெரும்பாலான கல்லூரி இளைஞர்களை அங்கு காணவில்லை.

‘எங்கடி அவங்க ?’

‘மதன் அண்ணா அந்த பையன் யாருனு கேட்டாரு . நான் கை காமிச்சேன் , அவன்கிட்ட பேசுறதுக்கு போறேன்னு சொல்லிட்டு போனாரு . அப்புறம் கொஞ்ச நேரத்துல ரெண்டு பசங்க வந்தானுங்க . அவனுங்க கூட இங்க இருந்த பசங்களும் கிளம்பி போனாங்க . என்ன ஆச்சுனு தெரியலை டி ’

5

# ஐ லவ் யூ டி

காத்திருப்பு என்பது ஒருசில நேரங்களில் இனிமையாகவும் , பல நேரங்களில் கடினமாகவும் இருக்கும் . ஆனால் மொத்தமாக , காத்திருக்கும் ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாகவே இருக்கும் . அதுவும் காதலில் விழுந்தவர்களின் காத்திருப்பு என்பது அனல்மேல் துடிக்கும் புழுவைப்போல் தான் .விட்டில் பூச்சி

ஒளியைத்தேடுவதுபோல் , இங்கு ஒரு கன்னியின் விழிகள் தன் காதலனைத்தேடிக்கொண்டிருக்கிறது . நேரம் ஆக ஆக அவள் இருதயம் துடிக்கும் வேகமும் அதிகரித்தது . எல்லாம் இந்த மாலினியால்தான் . அவள் மட்டும் இவ்விஷயத்தை மதனிடம் சொல்லாமல் இருந்திருந்தால் தனக்கு இந்நிலையே வந்திருக்காது என்று மனதினுள் துடிதுடித்தாள் மையல் . போனவன் இன்னும் வரவில்லையே என்ற கவலையில் இவள் ஆழ்ந்திருக்க , கூட நிற்கும் தோழிகளோ நேரமாகிறது என்று கூப்பாடு போட ஆரம்பித்தார்கள் . மனதை பேருந்து நிலையத்திலேயே விட்டுவிட்டு பேருந்தினுள் ஏறிச்சென்றாள் .

இந்த மதனைப்பார்த்த நாளில் இருந்து தனது தூக்கத்தைத்தொலைத்தவளுக்கு , பெரும்பாலான இரவுகள் துக்கத்தையே கொடுத்திருந்தது . இன்றைய இரவு நீண்டதொரு இரவாய் , பல யுகங்கள் கடப்பதுபோல கடந்தது . பூமியில் ஒருவேளை கருந்துளைகள் இருந்திருந்தால் , அன்றைய காலைப்பொழுதிற்கு டைம்ட்ராவல் செய்து மூர்க்கத்தனமாக மிரட்டிய அந்த கரியன் பயணித்த பேருந்தில் ஏறாமல் இருந்திருப்பாள் . அவன் மிரட்டியதைக்காட்டிலும் , மதன் அவனிடம் சண்டைக்குச்சென்றதே பெருங்கவலையாய் அவளை வாட்டியெடுத்தது . அடுத்தநாள் விடிந்தது . கவலை இன்னும் தீர்ந்தபாடில்லை . மதனைப்பார்த்தால் மட்டுமே மனதை விட்டு அந்த கவலையின் ரேகைகள் ஓடும் . எதுக்கு இந்த தேவையில்லாத வேலை என்று

அவனைப்பார்த்து நன்றாகத்திட்ட வேண்டும் என்று முடிவெடுத்தவாறே பேருந்தில் ஏறினாள் . நேற்று மிரட்டியவன் இன்று இல்லை .ஏதோ பெரிதாய் நடந்திருக்கவேண்டும் . தோழிகளின் அரட்டை அன்று அவளை ஈர்க்கவில்லை .சில நிமிடங்களில் மதனின் பஸ் ஸ்டாப் வந்தது . அதோ ஏறுகிறான் . பொறுக்கி . தெருவில் போய் சண்டையிடும் பொறுக்கி என்றவாறு மனதினுள் நினைத்தாள் . வரட்டும் , கவனித்துக்கொள்ளலாம் என்றவாறே அவனைப்பார்த்துக்கொண்டிருந்தாள் . அவனுடைய கன்னம் லேசாய் சிவந்திருந்தது . இரண்டுவிரல்கள் பதிந்த அடையாளம் தெரிந்தது ., அவளுக்கோ கோவம் பீறிட்டது . இப்போது மாத்திரம் நேற்று மிரட்டியவன் இருந்திருந்தாள் , அவனை

சட்டையைப்பிடித்து உலுக்கி காட்டில் வசிக்கும் காளியைப்போல் ருத்ரநடனம் ஆடியிருப்பாள் .

மதன் படிக்கட்டிலேயே இருந்தான் . உள்ளே வரவில்லை . அவன் வருவான் என்று ஏக்கப்பார்வை பார்த்தவளுக்கு பெரும் ஏமாற்றமாய் இருந்தது . நேரம் ஆக ஆக , பேருந்து நிலையத்துனுள் பேருந்து நுழைந்து தன் அப்போதைய பயணத்தை முடித்தது . மதன் வேகவேகமாய் இறங்கி அவன் கல்லூரிக்குச்செல்லும் பாதையினில் பயணிக்க ஆரம்பித்திருந்தான் . இவள் பேருந்து நின்றதும் அவன் சென்ற திசையினை நோக்கி பயணித்தாள் .

‘மதன்’ என்ற அவளின் குரல் கேட்டதும் சிலைபோல் அவன் நின்றான் . மெல்ல திரும்பியவன் ‘என்ன’ என்பது போல் பார்த்தான் .

‘நேத்து என்ன ஆச்சு ?’

‘ஒன்னுமில்ல . அந்த பையன பாத்து பேசுனேன். தட்ஸ் ஆல் ’

‘கன்னத்துல என்ன ?’

‘அதுவா ! அவன் கொஞ்சம் ஓவரா சீன்

போட்டான் . பேசிட்ருக்கும்போதே கை வச்சான் . அப்பறம் நானும் கைவச்சேன் . சண்ட பெருசாயிடுச்சி . கடைசில அவன் ஓடிட்டான் . இனிமேல் உன் பக்கம் அவன் வரமாட்டான் .' என்று சொல்லிவிட்டு அவன் நேராய் கிளம்பினான் .

அவனைத்திட்ட வாயெடுத்தவள் அவன் செல்வதைப்பார்த்ததும் கடுப்பின் உச்சத்திற்கே சென்றுவிட்டாள் . கோவமாய்த்திரும்பி தனக்காக காத்திருக்கும் தோழிகளை மதிக்காமல் அவர்களைக்கடந்து அவள் நேராய் கல்லூரி சென்றடைந்தாள் .

'தேவி ! நீ சொன்னமாதிரியே அவ பஸ் ஸ்டான்ட்ல பேசுனா . மேடம் செம

கோவத்துல இருந்தாங்க . நேத்து நைட் நீ சொன்னமாதிரியே , நடந்தத சொல்லிட்டு ஓடிவந்துட்டேன் . அங்க மட்டும் நின்னுருந்தா , அவ என்ன திட்டிதீத்துருப்பா . அப்பா ! அவ்வளவு கோவம் அவளுக்கு வரும்னு நா நினச்சுக்கூட பாக்கல . பஸ்ல வரும்போது அவள பாக்கனுமே ! நானே பயந்துட்டேன்டீ ' என்றவாறு தேவியிடம் தெரிவித்தான் . நேற்றைய சண்டை முடிந்தபின் தேவியிடம் இதைப்பற்றி பேசியிருந்தான் . அவள்தான் இன்று அவளை கண்டுகொள்ளாதே ! அவளுக்கு உன்மேல் இருக்கும் ஈர்ப்பு , பயங்கர கோபத்தை உண்டாக்கியிருக்கும் என்றவாறெல்லாம் தெரிவித்திருந்தாள் . அன்றைய மாலை பேருந்தில் மையலின் அருகே நின்று கொண்டிருந்தான் . அவளின் கோவம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்து காதல் மிகுந்திருப்பதை கண்ணால் கண்டான்

.

‘எதுக்கு நீ பொறுக்கி மாதிரி சண்டைக்கு போன ?’

‘அவன் உன்ன திட்டிட்டான் . அதான் ’

‘ஓ ! திட்டுனா சண்டைக்கு போவிங்களா ?’

‘ஆமா !’

‘நீ கூடத்தான் முதல்நாளே என்ன திட்டுன ’ என்று அவள் கூறிமுடிக்கும்போது , மதனின் முழுக்கை சட்டையை மடித்தான் . அவனின் முழுங்கைக்கு அருகில் சிகரெட்டால் உண்டாகியிருந்த காயம் தெரிந்தது .

‘ஹேய் ! என்னடா ஆச்சு ?’

‘அன்னைக்கு உன்ன திட்டுனப்போ மனசு கேட்காம , நானே சூடு வச்சிகிட்டேன் .’

‘லூசாடா நீ ! அறிவில்ல உனக்கு …’ என்று திட்டிக்கொண்டே இருந்தாள் . அவள் திட்டிமுடிக்கவும் அவன் ஊரைப்பேருந்து

நெருங்கவும் சரியாய் இருந்தது . அவளிடம் ஒரு பேப்பரை நீட்டினான் .

‘என்ன இது ? லவ் லெட்டரா ?’ என்று சிறிய கோவப்பார்வை பார்த்தாள் .

‘அதெல்லாம் இல்ல . என்னோட போன் நம்பர் . ’

‘எதுக்கு எங்கிட்ட கொடுக்கற ?’

‘உங்கிட்ட பேசலாம்னு தான் .’

‘எங்கிட்ட மொபைல் இல்ல .’

‘இந்த காலத்துப்பொண்ணுங்க கிட்ட வெட்கம்கூட இல்லாம இருக்கும் . மொபைல் இல்லாம இருக்காது .’

‘எங்கிட்ட போன் இல்லடா . அதுவுமில்லாம எங்கிட்ட ப்ரபோசல் பண்ணக்கூடாதுனு நா உங்கிட்ட ஆல்ரெடி சொல்லிருக்கேன் . அப்படி ஏதாச்சும் நீ ட்ரை பண்ண , உன்னவிட்டு போய்டுவேன்னும் சொல்லிருக்கேன் . இதுக்குமேல உன் இஷ்டம் ’ என்றாள் . அவளின் பேச்சுகளை காதில் போட்டுக்கொள்ளாமல் பேருந்தில் இருந்து இறங்கினான் . உண்மையாகவே அவளிடம் போன் இல்லையோ ? நாம்

புதிதாய் ஒரு போன் வாங்கிக்கொடுத்துவிடவேண்டியதுதான் . அடடா ? போன் வாங்க காசு ? சரி அதான் ஸ்காலர்ஷிப் பணம் வருமே! என்றவாறே வீட்டினுள் நுழைந்தான் . இரவெல்லாம் அவள் அவனைப்பொறுக்கி என்று செல்லமாய்த்திட்டியதே ஞாபகம் வந்தது . உருண்டு புரண்டு படுக்க முயற்சித்தவனை தொல்லை செய்வதற்கென்றே போன் வந்தது . கண்ணன் தான் லைனில் .

‘சொல்லு மச்சி .’

‘மச்சி ! நாளைக்கு காலேஜ் போலாமா இல்ல கட் அடிக்கலாமா ?’

‘அத காலைல முடிவு பண்ணிக்கலாம் மச்சி’ என்றவாறு போனை கட் செய்தான் . உடனே புது எண்ணிலிருந்து ஒரு அழைப்பு வந்தது .

‘ஹலோ ’ என்றவனுக்கு ஒரு பெண்குரல் கேட்டது .

‘உங்க நம்பர் ஒரு போட்டியில வின் பண்ணிருக்கு . கோவா போற சான்ஸ் கிடைச்சிருக்கு மிஸ்டர் மதன் ’ என்று அவள் சொல்ல , கடுப்பாகி போனை அணைத்தான் . மீண்டும் ஒரு அழைப்பு வர அட்டன்ட் செய்தான் .

‘ஹேற ! நா மையல் பேசுறேன் . இதுதான் என்னோட நம்பர் . திருப்பி கால் , மெசேஜ் எதுவும் பண்ணிடாத . பை ’ என்றவாறு வேகவேகமாக கூறிவிட்டு போனை கட் செய்தாள் . உடனே அவளின் நம்பருக்கு போன் செய்தான் . கடைசி ரிங் அடித்தபின்பு அவள் போன் எடுத்தாள் .

‘ஹேய் ! நான்தான் சொல்லிருந்தேன்ல . எதுக்கு கால் பண்ண ?’

செல்லமாக கோவித்தபடி , சிணுங்கியவாறே பேசினாள் .

‘ஏன்டி ? போன் பண்ணாதனு சொல்றதுக்கு யாராச்சும் போன் பண்ணுவாங்களா ? ’

‘சரி . சரி . ஏதுவா இருந்தாலும் சீக்கிரம் சொல்லு . நா படிக்க போகனும் ’

‘ஐ லவ் யூ டி .’

6

# ஐ லவ் யூ டா

'ஐ லவ் யூ டி' என்ற அவனின் ஹஸ்கியான குரலைக்கேட்டதும் சிலவிநாடிகள் அமைதியாய் இருந்தாள் . ஒருவித குறும்புடன் நக்கலும் சேர்த்து ஒலிக்கும்படி அவனிடம் கேட்டாள் .

‘இத சொல்றதுக்குத்தான் போன் பண்ணியா ?’

‘இன்னும் சொல்ல நிறைய இருக்கு .’

‘எங்க சொல்லு . கேட்கலாம் ’ என்று ஆவலோடு அவள் கேட்டது இவனுக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கக்கூடும் . எழுந்து வீட்டை விட்டு தெருவுக்கு வந்தான் . அவனுடைய ஊர் ஒரு கிராமம் என்பதால் வீடுகள் தள்ளி , தள்ளி தூரமாய்த்தானிருக்கும் . ஒரு ஒத்தையடி பாதையில் இரவு பத்துமணிக்கு நடந்துகொண்டே பேச ஆரம்பித்தான் . அவனுடைய பேச்சு முடிவதற்கு முக்கிய காரணமாய் அவனுடைய செல்போன் பேட்டரி இருந்தது . அது மட்டும் ஆஃப் ஆகாமல் இருந்திருந்தால் , மதன்

இன்னும் எவ்வளவு நேரம் பேசுவான் என்பது அவனுக்கேத்தெரிந்திருகாது . இரவு 1 மணிக்கு மீண்டும் தன் தனியறைக்கு வந்து படுத்தான் . அன்றைய இரவைப்போல் நிம்மதியான ஒரு இரவினை அவனால் அனுபவித்திருக்கமுடியாது . உலகம் அழிந்தாலும் சிரித்துக்கொண்டே இறக்கத்துணிந்துவிட்டான் . அவனுக்கு அவளிடம் மிகவும் பிடித்தமான ஒரு விஷயம் என்னவென்றால் , அவ்வளவு நேரம் பேசியும் அவள் ஒருமுறைக்கூட இவனிடம் தன் காதலை சொல்லவில்லை . அதன்பின் காலையில் சந்தோஷமான பேச்சும் , மாலையில் ஒரு சின்ன சண்டையும் , அதை சமாளிக்க இரவினில் பேச்சுமென பேசிப்பேசியே பொழுதுகள் கழிந்தன . அவள் கூறுவதைச்செய்யத்தான் , தான் இந்த உலகில் பிறந்ததாய் நினைக்கொண்டான் . அவளும்

தன்னுடைய திருமணத்திற்கு முன்பே ஒரு மகன் கிடைத்துவிட்டான் என்பதுபோல , மதனை சீராட்டி அன்பமுதம் காட்டி அவனுடன் வாழ்ந்தாள் . அவர்களிருவருக்கும் சண்டை என்பது ஒன்று வருவதற்கு முக்கிய காரணமாய் இருந்தது ஒரே விஷயம்தான் .

'தம் அடிக்காதனு எத்தன தடவ சொல்றேன் . கேட்க மாட்டியா ?' என்று ஆரம்பத்தில் சண்டையிட்டவள் , இவன் திருந்தவே மாட்டான் என்றுணர்ந்து 'சரி ! ஒருநாளை ஒன்னே ஒன்னு தான் . என்மேல பிராமிஸ் பண்ணு' என்றவரைக்கும் வந்துவிட்டாள் . ஆனால் அவன் சத்தியம் செய்யமாட்டான் .

'ஹேே ! எனக்குனு நா நினைக்கிற ஒரு

விஷயத்துல இதுவும் ஒன்னுடி . உனக்காக என்னால நிறுத்தமுடியாது . நீ கம்பல் பன்றத முதல்ல நிறுத்து . எனக்கா தோனுச்சுனா நா விட்டுடுவேன் ' என்பான் . உடனே அவளுக்கு முகம் கோணிக்கும் . பஸ்ஸில் அதைப்பற்றி தொடர்ந்து பேசமாட்டாள் . வீட்டிற்கு வந்ததும் போன் செய்துஅவனை கடையோ கடையென்று கடைவாள் . அவனும் சமாதானப்படுத்துவான் . கடைசியில் இருவரும் உருகிக்கொள்வார்கள் . இருவரும் காதலித்து ஒரு வருடம் தாண்டியபின்பும் இன்னும் அவள் காதலை அவனிடம் சொல்லவில்லை . அவள் உதட்டிலிருந்து அதைக்கேட்க வேண்டும் என்ற ஆசையில் அவனும் ஏதேதோ தகிடுதத்தம் வேலைகள் எல்லாம் செய்து பார்த்தான் . அவள் மசியவே இல்லை .

அவ்வப்போது மையலிடம் ஒருசிலர் ப்ரபோசல் செய்வார்கள் . மதன் அதையெல்லாம் பார்த்துக்கொண்டு சிரிப்பான் . 'ஹே ! நல்ல பையன்டி . உனக்காக உயிரையும் கொடுப்பான் . பாவம் அக்சப்ட் பண்ணிக்கோடி' என்று அவளை ஓட்டுவான் . அச்சமயங்களில் அவளுக்குப் பற்றிக்கொண்டு வரும் . அந்த கோவத்தையெல்லாம் தனிமையில் தான் அவனிடம் காட்டுவாள் . நடுவே அவளின் பிறந்தநாளுக்கு விஷ் பண்ண மறந்து , அவளிடம் அடியும் வாங்கிக்கட்டிக்கொண்டான் .

அவளின் அறிவுரைப்படி இருந்த அரியர்ஸ் எல்லாம் கிளீன் செய்தான் மதன் . ஒரு எஞ்சினியரிங் கல்லூரியில் கொஞ்சமாய்

டொனேஷனும் ரெக்கமென்டேசனுடனும் சீட் வாங்கி சேர்ந்துவிட்டான் . கண்ணன் மற்றும் தேவியும் அதே கல்லூரியில் சேர்ந்தார்கள் . கல்லூரிக்கு செல்கிறானோ இல்லையோ ! தினமும் மையலைப்பார்ப்பதற்கே கிளம்பி விடுவான் . ஒருநாள் காலை மையல் 'எங்கயாச்சும் வெளிய கூட்டிட்டுப்போடா' என்று ஆசையுடன் கேட்க , அதுவரை ஒருநாள் கூட கட் அடித்துவிட்டு வராத அவளே கேட்கிறாளே என்ற சந்தோஷத்தில் முதலில் ஒரு ஐஸ்கிரீம் பார்லருக்குக் கூட்டிச்சென்றான் . அவனுடன் ஒன்றுசேர்ந்து அமர்ந்தாள் . அவளுக்குப்பிடித்த ஸ்ட்ராபெரி ஆர்டர் செய்துவிட்டு காத்திருந்த நேரத்தில் , மதனின் கையைப்பிடித்தவாறே அவன் தோளில் தலை சாய்ந்தாள் . கைவிரலைப்பிடித்தாலே கதறும் அவள் , இன்று மதனின் தோளில் சாய்ந்திருப்பது

இன்ப அதிர்ச்சியாய் இருந்தது . ஐஸ்கிரிம் வந்ததும் அவளே அவனுக்கு ஊட்டினாள் .

'என்னடி ஆச்சு உனக்கு ? இன்னைக்கு ரொம்ப பாசத்த காட்ற ?'

'ஐ லவ் யூ டா ' என்றாள் . இரண்டு வருடங்களுக்குப்பிறகு இன்று தான் அவனிடம் அவள் வாய் திறந்து ஐ லவ் யூ என்று கூறுகிறாள் . அவளின் காதலை நன்றாய் மதன் உணர்ந்திருந்தாலும், அவளிடமிருந்து அதைக்கேட்கும்போது இதுவரை அவன் கேட்ட பாடல்களிலேயே இனிமையானதாக ஒலித்தது . ஐஸ்கிரிமை ஊட்டிவிட்ட பின் படத்திற்கு கூட்டிச்செல்லுமாறு அவள் கேட்க , தியேட்டரை அடைந்தார்கள் . வழக்கம்போல

காதலர்களை ஆதரிக்கும் கார்னர் சீட்டுகளில் அடைக்கலம் அடைந்தனர் . படம் ஓட ஆரம்பித்ததும் அவன் கையைப்பிடித்தபடியே அவன் தோளில் சாய்ந்தாள் .

'என்ன கிஸ் பண்ணனும்னு உனக்கு ஒருநாள் கூட தோனுனதே இல்லையாடா ?' என்றாள் ஏக்கமாக . அவளின் பார்வையில் காதல் கொந்தளித்தது . அது காமத்தைத்தாண்டிய பார்வை . காதலின் தவிப்பால் முத்தம் கேட்கும் பார்வை .

'என் மனசுக்குள்ள உன்ன கிஸ் பண்ணாத நாளே இல்லடி ' என்று மெல்லிய புன்னகையுடன் சிரித்தான் .

‘எனக்கு ஒரு கிஸ் வேணும்டா . ப்ளீஸ் ’ என்றாள் ஏக்கமாக . உண்மையான காதலை அனுபவித்தவர்களுக்கு அந்த முத்தம் எத்தகைய உணர்வு என்று தெரியும் . அவள் தன்னுடைய உடல்தாகத்தை அணைக்க அவ்விடத்தில் முத்தத்தைக்கேட்கவில்லை . அவனோ , அவள் கேட்டதும் இன்பஅதிர்ச்சியின் உச்சத்திற்கு சென்றான் . அவளின் இதழைப்பற்றிக்கொள்ள , அவனின் உதடுகள் துடித்தன . அவனின் கண்கள் , அவளின் பாதி சொருகிய விழிகளைப்பார்த்து உருகியது . மூச்சுக்காற்று மெல்ல உள்ளே சென்று பெருமூச்சாய் வெளிவந்தது . குரல் தழுதழுத்தவாறே அவளிடம் மென்மையாக பேச ஆரம்பித்தான் .

'இல்ல மையல் . கல்யாணத்துக்கு முன்னாடி உன்ன எச்சப்பண்ண எனக்குஇஷ்டமில்லடி . நீ முழுசா எனக்கு வேணும். நம்மோட முதல்முத்தத்துக்காகத்தான் நா வாழ்க்கைல போராடிட்டுருக்கேன் . அது திருட்டுத்தனமா கிடைக்கறதுல எனக்கு இஷ்டமில்லடி . நீ எனக்குனு மட்டும் ஆன பின்னாடி , முழு உரிமையோட உன்ன தொடனும் . ' என்றான் காதலோடு .

அவன் தோளைப்பற்றியிருந்த அவளின் கைகள் இருக்கத்தைக்காட்டியது . அவனை அவள் இறுகப்பற்றிக்கொண்டாள் . அவளின் முகம் அவனின் தோளின் மேல் அழுத்தமாய் பதிந்தது . சூடான கண்ணீர் அவன் தோளில்

பட்டதும் ‘அம்மு ! என்ன ஆச்சு ?’ என்று கவலையுடன் அவன் கேட்டான் . மெல்லமாய் அவன் முகம் நோக்கி தன் தலையைத்தூக்கியவளின் கண்கள் கலங்கியவாறு இருந்தது . ‘அம்மு’ என்று மறுபடியும் அவன் அழைக்க ,

‘ஏன்டா என்ன இவ்ளோ லவ் பண்ற ? ப்ளீஸ் . என்ன இவ்ளோ அதிகமா லவ் பண்ணாத . நாந்தான் உன்ன அதிகமா லவ் பண்ணனும் . என்ன தோக்கடிச்சிடாதடா’ என்று அழுதவாறே கூறினாள் . மதனின் கண்களும் கொஞ்சம் கொஞ்சமாய்க்கண்ணீரில் நனைய , அவனின் கைகள் மையலின் விழிகளில் ஓடிய கண்ணீரைத்துடைத்தது . அவள் அப்படியே இவனின் தோளின்மேல் சாய்ந்து கிறங்கிக்கிடந்தாள் . இவனோ அவளின்

தலையின்மீது தன்னுடைய கன்னங்களை வைத்து கண்களை மூடியவாறு அவளின் அருகாமையை உணர்ந்தான் . அங்கு உண்மையாகவே ஈருடல்களில் ஓருயிர் உலவிக்கொண்டிருந்தது .

# 7

# பிடிக்கல

‘எங்கப்பாவுக்கு நம்ம விஷயம் தெரிஞ்சிடுச்சி மதன் ’ என்று கண்கலங்கியவாறே மதனிடம் மையல் கூறினாள் . எவ்வளவோ இனிமையான நினைவுகளை அவர்களுக்குத்தந்த அந்த பேருந்து பயணம் இன்று கொடுமையானதாக இருந்தது . நியூட்டனின் மூன்றாம் விதி இவ்வளவு சீக்கிரமாக இவர்களின் வாழ்க்கையில்

அப்ளை ஆகும் என்று எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் .

'எப்படி தெரிஞ்சது ?'

இடைப்பட்ட காலங்களில் இவர்களின் காதலுக்குள் பிரிவினை ஏற்படுத்த ஒருவன் உள்நுழைந்தான் . அவன் மையலின் தூரத்து உறவினன் . பார்க்க போந்தாக்கோழி போல் இருக்கும் அவன் மையலுக்கேத்தெரியாமல் அவளை கபளிகரம் செய்ய முயற்சித்தான் . மதனின் கெத்தும் , நண்பர்கள் செட்டையும் பார்த்து மிரட்சியுடன் ஒதுங்கி நின்றான் . தினந்தோறும் மையலின் அருகில் அமர்ந்து வேறு சாதியைச்சார்ந்த மதன் , அவள் கையைப்பிடிப்பது இவனுக்கு அருவெருப்பை

உண்டாக்கியிருந்தது . மதனிடம் மையல் சிரித்து பேசும்போதெல்லாம் இவனுக்கு நரம்புகள் புடைக்கும் . அவனின் கோவத்தை நேரடியாகக்காட்டாவோ , மையலைக்கண்டிக்கவோ போதுமான தைரியம் இல்லாதவன் . அவனுக்கு மையல் வேண்டும் . அவ்வளவே அவன் எண்ணம் . அதற்காக குறுக்கவழியைக்கண்டறிந்து அதன்படி சென்றான் .மையலின் வீட்டில் சொல்லிவிட்டான் .

'யாரோ எங்க வீட்டுல சொல்லிட்டாங்க .' என்று அழுதவாறே கூறினாள் .

'அம்மு . அழாத ! இப்போ என்ன ? உங்க வீட்ல தெரிஞ்சிடுச்சி . அவ்ளோதான . நா

உங்க வீட்டுல வந்து பேசறேன் .'

'அதெல்லாம் வேண்டாம் . என்ன இன்னைக்கே எங்கயாவது கூட்டிட்டு போய்டு . ப்ளீஸ் .' என்று மீண்டும் அழுதாள் .

'ஹே ! லூசாடி நீ . நா இன்னும் காலேஜ் முடிக்கல . அதுவுமில்லாம என்ன பெத்த பையனவிட பாத்துப்பாத்து என்னோட அங்குள் வளர்த்திருக்காரு . அட்லீஸ்ட் அவருகிட்டயாச்சும் ஒரு வார்த்தை சொல்லனும் .'

'எனக்கு பயமா இருக்குடா . ப்ளீஸ் . என்ன

விட்டுட்டு போய்டாத டா .'

'ஒருநிமிஷம் பொறுமையா யோசிச்சு பாரு அம்மு . நா உன்ன கல்யாணம் பண்ணி ராணிமாதிரி வச்சி'க்காப்பாத்தனும்னு நினைக்கிறேன் . இப்போ இருக்க நிலைமைல எப்டிடி ? நா ஆல்ரெடி சொல்லிருக்கேன்ல . உங்க வீட்ல உன்னப் பாத்துக்கரத விட நல்லா உன்னப்பாத்துக்கனும் . அதுதான் எனக்கு முக்கியம் .கொஞ்சம் பொறுமையா இரு தங்கம் . ' என்று ஒருமாதிரியாக சமாதானப்படுத்தினான் . அவனின் ஆறுதலான வார்த்தைகள் மனதின் காயத்திற்கு ஒத்தடம் கொடுத்தது போலிருந்தது .

வீட்டிற்கு வந்தவன் சிறிது நேரம் யோசித்தான்

. இதன்பின்னும் பொறுத்திருப்பது ஆபத்து என்றுணர்ந்தான் . அவன் அங்கிளிடம் எல்லா உண்மையைப்பற்றியும் உடைத்தாகவேண்டிய கட்டாயத்திற்குத்தள்ளப்பட்டான் . அவருக்காக காத்திருந்தான் . சப்-இன்ஸ்பெக்டரான அவருக்கு எப்போது வேலை முடியும் , எப்போது வீடுதிரும்புவார் என்பது கேள்விக்குறியே . ஆனால் அவனுடைய நேரத்திற்கு அன்று சீக்கரமாகவே வீட்டிற்குள் நுழைந்தார் . மனதைத்தைரியப்படுத்தியவாறே அவரிடம் சென்றான் .

‘அங்குள் ’

‘ம் ’

‘உங்க கிட்ட கொஞ்சம் பேசனும் ’ என்றவனை நிமிர்ந்து பார்த்தார் . அவரின் முகம் என்ன என்று வினவியது .

‘நா ஒரு பொண்ண மூனு வருஷமா லவ் பன்றேன் .’

என்னது மூனு வருஷமா என்பது போல் அவருடைய முகம் ஆச்சரியமானது .

‘அதுக்கு ?’

‘அவங்க வீட்ல தெரிஞ்சிடுச்சி . ’

அவர் அவனின் கண்களை கூர்மையாய் நோட்டம் விட்டவாறே கேட்டார் .

‘அவள கல்யாணம் பண்ணிக்கனுமா ?’

இவன் தலைகுனிந்தவாறே நின்றுகொண்டிருந்தான் .

‘உன் வயசு என்ன ? என்ன வேலைக்கு போற ? ஒருபடி பொன்னி அரிசி விலை என்னன்னு தெரியுமா ?’

என்ற அவரின் கேள்விகளுக்கு பதில் கூறாமல் நின்றிருந்தான் . அவனுக்கு பொன்னி அரிசியைப்பற்றிய கவலை இல்லை . உள்ளுக்குள் தன் காதல் இளவரசியைப்பற்றிதான் கவலை .

'பொண்ணு என்ன ஜாதி ?'

'******* அங்குள் .'

'செட் ஆகாது . விட்ரு .'

'அங்குள் ' என்று ஏமாற்றத்துடன்

அவரைப்பார்த்தான் . அவனின் கண்களில் பிச்சைக்கேட்பவனின் ஒளி தெரிந்தது . அவரோ அவனைக்கவனிக்காமல் எழுந்து சென்று பீரோவைத்திறந்து சில பைல்களை கொண்டுவந்தார் .

'மீறி கல்யாணம் பண்ணிக்கனும்னு நினைச்சினா இங்க இருக்கமுடியாது . உங்க அப்பனோட இன்சூரன்ஸ் பணம் , உன் பேர்ல வாங்கி வச்சிருக்க நிலம் பத்தின எல்லா பைலும் இதுல இருக்கு . எடுத்துகிட்டு கிளம்பிடு .' என்று குரல் தழுதழுத்தவாறே கூறினார் . அவனை எப்படியாவது நல்ல நிலைமைக்குக்கொண்டு வந்து சேர்த்துவிடவேண்டும் என்று வாழ்க்கைமுழுமைக்கும் போராடிக்கொண்டிரு'ககும் ஜீவனின்

கண்கள் கலங்கியிருந்தது . அவன் தம் அடிக்கிறான் எனத்தெரிந்திருந்தாலும் அதை அவனிடம் அதைப்பற்றி நேருக்குநேர் ஒருமுறைக்கூட பேசியதில்லை . ஒரே ஒரு தடவை குடித்துவிட்டு வந்தவனிடம் 'உங்கப்பன மாதிரி நீயும் ஆகிடாதடா ' என்று கெஞ்சியவர் . அன்றிலிருந்து குடிப்பதை நிறுத்தியவன் . இன்றோ , அவனை தராசுபோல் மாற்றிவிட்டார் .ஒருபக்கம் தன்னையே நம்பி காத்திருக்கும் மையல் , இன்னொருபுறம் தனக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த மாமன் .

மதன் அதற்கடுத்து எதுவும் பேசவில்லை . அவனுக்கு நன்றாய்த்தெரியும் . அவனுடைய வீட்டில் ஜாதிப்பிரச்சனை பெரிதளவில் இருக்குமென்பது நன்றாய் தெரியும் .

அவ்வளவு ஏன் , அவனே நண்பர்களைக்கூட ஜாதிவாரியாகத்தான் பிரித்து வைத்திருந்தான் . காதலிக்கும்போது கூட அடிக்கடி மையலின் ஜாதியைக்கிண்டலடிக்காமல்
இருக்கமாட்டான் . அவளும் இவனைப்போல் ஜாதி பார்த்திருந்தால் , இவர்களின் காதல் அப்போதே முடிந்திருக்கும் . இனி யோசிக்க ஒன்றுமில்லை . கடைசியாய் ஒருமுறை மையலின் வீட்டில் மோதிப்பார்த்துவிட வேண்டியதுதான் என்றவாறு அவளின் வீடு நோக்கி தன் பைக்கை கிளப்பினான் .

கிளம்பும்முன் கண்ணனுக்கு போன் செய்து மையலின் வீட்டினருகே இருக்கும் டீக்கடைக்கு வருமாறு கூறியிருந்தான் . அவளின் வீடுநோக்கி செல்லும்போதெல்லாம்

எதிர்காலத்தைப்பற்றிய பயத்துடன் தானிருந்தான் . அவனுடைய மாமாவிற்கு ஜாதியைக்காட்டிலும் அவனே முக்கியம் . இருந்தாலும் அவனுடைய கிராமம் முழுமையும் அவருக்கு அங்காளி , பங்காளி , மாமன் , மச்சான் உறவினராகவே இருந்தனர் . இவன் வேற்றுசாதிப்பெண்ணைத்திருமணம் செய்துவிட்டான் என்று அவர்கள் அறிந்தால் ஊருக்குள் தலைநிமிர்ந்து எங்கும் செல்லமுடியாது . தான் அவமானப்படுவதோடு மட்டுமில்லாமல் 'தங்கை மகனை ஊர்ப்பொறுக்க வைத்துவிட்டான் . வளர்ப்பின் லட்சணம் இதுதானா ?' என்று ஊரே அவமானப்படுத்தும் . தன் மகளுக்கு நாளை வரன்தேடினாலும் இந்த பிரச்சனை குறுக்கில் வரும் . இவனைக்காட்டிலும் இக்கட்டான சூழலுக்கு அவர்தான் தள்ளப்பட்டார் .

மதன் அவளின் வீட்டை அடைந்தான் . கண்ணனிடம் வெளியில் காத்திருக்குமாறு கூறிவிட்டு அவளின் வீட்டிற்கு சென்று காலிங்பெல்லை அடித்தான் . அவனுடைய அம்முவின் தங்கைதான் கதவைத்திறந்தாள் . அவள் மதனைப்பார்த்ததும் ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்தாள் .

'அச்சோ ! இங்க எதுக்கு வந்திங்க ? ஏற்கனவே நிறைய பிரச்சன ஓடுது .அப்பா வேற வீட்டுல இருக்காரு . தயவு செஞ்சு கிளம்புங்க ' என்று அவள் கூறும்முன்பாக அவளின் தந்தையின் குரல் வந்தது .

‘யாரும்மா ?’

‘யாருனு தெரிலப்பா . ’ என்றவாறு அவள் கதவைவிட்டு வேகமாக அக்காவின் அறைக்கு ஓடினாள் . மதனைப்போலவே அவர்களும் நடுத்தட்டு வர்க்கம்தான் என்பது அவர்களின் வீட்டின் பெயிண்டின்வாயிலாகவே அறியமுடிந்தது .

‘யாருப்பா நீங்க ?’

‘சார் . நா உங்க கிட்ட கொஞ்சம் பேசனும் .’

‘உள்ள வாங்க ’ என்று அழைத்தவர் அவனை அமர சொன்னார் .

‘சொல்லுப்பா .’

‘சார் . எம்பேரு மதன் . ’ என்றவுடன் அவருடைய கண்கள் விரிந்தது . அவருடைய முகம் மாறியது நன்றாகவே தெரிந்தது .

‘நானும் உங்க பொண்ணும் லவ் பன்றோம் .’ என்று தட்டுத்தடுமாறி கூறிமுடித்தான் .

மையலின் தந்தை எதுவும் பேசவில்லை .

அவளின் தாயோ ஒரு ஓரமாய் நின்று இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள் .

‘அம்மா . இங்க கொஞ்சம் வாம்மா ’ என்று சத்தமாக யாரையோ அழைத்தார் . அதுவரை கதவருகில் நின்று நடப்பதை படபடப்புடன் பார்த்துக்கொண்டிருந்த மையல் அவரின் அருகில் வந்து நின்றாள் .

‘இந்த பையன நீ லவ் பன்றியாமா ?’ என்றார் அழுத்தமாக .

அவள் தொடர்ந்து மௌனம் சாதித்தாள் .

‘சரி தம்பி . நீங்க உங்க வீட்டுல இருக்கவங்கள வர சொல்லி பொண்ணு கேளுங்க . எனக்குப்பிடிச்சிருந்தா மேற்கொண்டு பேசலாம் .’ என்றவாறு அவர் எழுந்து நின்றார் .

‘சார் . எங்க வீட்ல ....’

‘என்னப்பா ?’

‘எங்க வீட்டுல ஜாதி மாத்தி கல்யாணம் பன்றத ஏத்துக்க மாட்டாங்க சார் . ’

‘அப்றம் எப்டிப்பா ?என்ன பாத்தா மட்டும் இளிச்சவாயன் மாதிரி தெரியுதா ? சரி நீ வேல செய்ற ?’

‘படிச்சிட்ருக்கேன் சார் .பி.இ. பைனல் இயர் .’

‘ஓ ! நல்ல படிப்பு தான் . இவளுக்கும் இன்னும் 6 மாசம் இருக்கு படிப்பு முடிய . அதுக்குள்ள நீ உங்க வீட்ல பேசி அவங்க மனச மாத்து . அதுக்கப்றம் பாத்துக்கலாம் . ’ என்றவாறு அவனின் பதிலை எதிர்பாராமல் கிளம்பி உள்ளே சென்றார் . வந்த காரியம் ஓரளவு சக்ஸஸ் ஆனது மதனுக்கு சந்தோஷமாய்த்தானிருந்தது . எப்படியாவது

அவன் வீட்டில் மட்டும் மனமாறம் செய்யவேண்டும் . கண்ணனிடம் நடந்ததைக்கூறிவிட்டு , ஓரளவு தெளிந்த மனதுடன் தன் வீட்டை அடைந்தான் . அவனுடைய மாமா ஒருமாதிரியாக அவனைப்பார்த்தாலும் ஏதும் சொல்லவில்லை . காலையில் வழக்கம்போல பேருந்தில் அவளைச்சந்தித்தான் . சந்தோஷ ரேகை அவனுடைய முகத்தில் மின்ன , அவளைத்தேடினான் . ஆனால் அவளோ இவனைக்கண்டும் காணதது போல் இருந்தாள் . அவளிடம் சென்று ஆசையாக இவன் பேச , அவள் பதிலேதும் சொல்லாமல் விரைத்தவாறு நின்றிருந்தாள் . மாலினியும் அதேபோலவே தான் இருந்தாள் . இவர்களிருவருக்கும் நடக்கும் சண்டையை தீர்த்துவைப்பவளே அமைதியாய் இருந்தாள் . என்ன நடக்கிறதென்று புரியாமல் இருந்தான் .

மாலையிலும் அதேநிலை தான் . ஓரளவு கெஞ்சிப்பார்த்தவன் , கடைசியில் மையலிடம் கோவப்பட்டு கேட்டான் .

‘ஹே ஏன்டி பேசமாட்டேன்ற ?’

அவ்வளவு நேரம் அமைதியாய் இருந்தவள் பொறுமையாய் தெளிவாய்க்கூறினாள் .

‘எனக்கு உன்ன பிடிக்கல . இனிமேல் எங்கிட்ட பேசாத . என்ன தயவு செஞ்சு டிஸ்டர்ப் பண்ணாத .’

# 8

# காதல்

அவள் எதற்காக கோவப்படுகிறாள் என்பது புரியாமல் குழம்பிய மதன் , ஏதேதோ முயற்சி செய்தும் அவளிடமிருக்கும் காரணத்தைக் கண்டறியமுடியவில்லை . இப்படியே இரு நாட்கள் முடிந்தது . அவள் கல்லூரியே கதி என்றிருந்தான் இன்றைய தினம் அவளிடம்

பேசி என்னவென்று அறிந்துகொள்ளவேண்டும் என்றவாறு முடிவெடுத்தவன் அவள் கல்லூரியை விட்டு வரும் வழியில் நின்றுகொண்டிருந்தான் . அவளும் வந்தாள் . அவள் கையைப்பிடித்து இழுத்து நிறுத்தினான் .

'எங்கிட்ட ஏன் அம்மு பேசமாட்டேன்ற ?' என்று குரல் தழுதழுத்தவாறே கேட்டான் . கண்கள் வழக்கம்போல கண்ணிருக்கு பழகியிருந்தது . காதலித்தால் அதிகம் சுரப்பது கண்ணிர் தான் . அவள் தலைகுனிந்தவாறே நின்றிருந்தாள் . அவளின் முகத்தைப்பிடித்து நிமிர்த்தினான் . அவளும் கண்ணிரை மறைக்கத்தான் தலைகுனிந்து நின்றிருந்தாள் . அவன் கண்களைப்பார்த்ததும் , அவளின் மனதினில் குடிகொண்டிருந்த சோகம்

கண்களின் வழியே கண்ணீராக பீறிட்டது .

'எங்கிட்ட எதுவும் கேட்காதடா. என்ன இப்பவே எங்கயாச்சும் கூட்டிட்டு போய்டு ' என்று அழுதவாறே கூறினாள் .

'நாம ஒன்னும் அனாத இல்லைடி . யாருக்கும் தெரியாம கல்யாணம் பண்ணிக்க . அதான் உங்க வீட்டுல ஓ.கே சொல்லிட்டாங்கள .' என்றான் . உண்மையில் மையலின் தந்தை , மதனை அனுப்பிவைத்தபின் மாலினியை அழைத்து பேசியிருந்தார் . அவளும் பயந்துகொண்டு மையலுக்கு மதனின்மேல் இருக்கும் காதல் பற்றியும் , இவர்களைப்பிரிக்க நினைத்தால் ஓடிச்சென்றாவது திருமணம்

செய்துகொள்வார்கள் என்பதனையும் தெரிவித்திருக்கிறாள் . இனி இவர்களிருவரும் பேசுவதைக்கண்காணிக்கும் பணியை மாலினியிடம் ஒப்படைத்துவிட்டு , மையலுக்கு அன்று இரவே மாப்பிள்ளைத்தேடும் பணியைத்தொடங்கியிருந்தார் . மையலோ தந்தையிடம் புரியவைக்க முயற்சிக்க ,

‘உனக்குப்பின்னாடி இவ வாழ்க்கைய நீ நினைச்சிப்பாத்தியாமா ? . தயவு செஞ்சு என் குடும்ப மானத்த அழிச்சிடாதமா ’ என்று அழுதார் . அவளும் அழுதுகொண்டே அவளின் தந்தையின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டாள் . தன்னைப்பெற்றவருக்காக , தான் பெறாத தன் காதலனை கைவிட முயற்சித்தாள் . கையை மட்டும் பிடித்திருப்பவனாக இருந்தால்

அவனை கைவிட்டிருக்கலாம் . ஆனால் அவளின் உயிரைப்பிடித்திருக்கும் மதனை எப்படி விட முடியும் ? இரண்டு நாட்களிலேயே அவளின் தந்தை பாசத்தை வென்றது அவளின் காதல் .

இப்போது மதனும் ஒருவாறு யோசித்தான் . இவளின் வீட்டில் ஏதோ பிரச்சனை என்பது மாத்திரம் புரிந்தது .

'சரி . கவலப்படாத அம்மு .நா பாத்துக்கறேன் ' என்றவாறு அவளுடன் பேருந்து நிலையத்திற்கு கிளம்பினான் . இரண்டு நாட்களாய் துடிதுடித்துக்கொண்டிருந்தவன் இன்று ஆறுதலாய் இருந்தான் . மனதில் மாத்திரம் பயமும் , என்ன செய்யலாம் என்ற

குழப்பமும் ஓடியது . பஸ் ஸ்டான்டில் காத்திருந்த கண்ணனிடம் கேட்டபின் ஒரு நல்ல யோசனை தோன்றியது . நாளை மறுநாள் நல்ல முகூர்த்த தினம் . அன்றைய காலைப்பொழுதில் ரிஜிஸ்டர் ஆபிஸ் அழைத்துச்சென்று அவளை மனம் புரிந்துகொள்ளலாம் . அதன்பின் அவள் வீட்டிலேயே அவள் இருக்கட்டும் . யார்வீட்டிலும் சொல்லவேண்டாம் . அடுத்தவாரம் வரவிருக்கும் கேம்பஸ் இன்டர்வியுவில் எப்படியாவது வேலையை வாங்கிவிட்டால் சாமாளித்துவிடலாம் என்று முடிவெடுத்தான் . அதை மையலிடமும் தெரிவித்தான் . மையல் ஓரளவு ஆறுதலடைந்தாள் . ஆனால் இவற்றையெல்லாம் பார்த்து இன்னொருத்தி பதறிக்கொண்டிருந்தாள் . இவர்களிருவருக்கும் மூன்று வருடமாய்

இணைப்புப்பாலமாய் இருந்த மாலினி தான் . மையலின் தந்தை அன்றைய பொழுது இவளை மிரட்டியது இவளின் நினைவுக்கு வந்தது .

'இங்க பாருமா . நீ செஞ்சத எல்லாம் உங்க வீட்டுல சொன்னா என்ன ஆகும்னு தெரியும் தான ?' என்ற அவரின் குரல் அவளுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியிருந்தது . ஒருவேளை அவளின் வீட்டில் இதெல்லாம் தெரிந்தால் அவளின் படிப்பு பாதியில் நின்றுவிடும் . அதன்பின் அடுத்த ஒரு மாதத்தில் அவளுக்கும் மாப்பிள்ளை பார்த்து திருமணம் நடந்துவிடும் . அவளுக்கு அதில் துளிகூட உடன்பாடில்லை . அவள் வாழ்க்கையை நன்றாய் அனுபவிக்க நினைப்பவள் மாலினி .

அடுத்த இரு தினங்கள் மையல் அந்த பேருந்தில் வரவில்லை . அவளின் தோழிகளிடம் கேட்டபின் தான் தெரிந்தது , அவளின் தந்தையே கல்லூரிக்கு கொண்டுவந்துவிடுகிறார் என்று .எப்படியாவது அவளைப்பார்த்து பேசியாகவேண்டும் என்று அவளின் கல்லூரிக்குள் நுழைந்தான் . அவளின் வகுப்பறையின்வழியாக சைகை செய்து வெளியே வர சொன்னான் . அவளின் முகம் முற்றும் பொலிவிழந்து கிடந்தது . கணவனை இழந்த கைம்பெண் போல் காட்சியளித்தாள் .

‘என்ன ஆச்சு மையல் ?’

‘நமக்குள்ள செட் ஆகாது மதன் . நாம பிரிஞ்சிடலாம் .’

‘ஹேய் என்ன விளையாட்றியா ?’

‘ ப்ளீஸ் மதன் . ’ என்றாள் அழுதுகொண்டு . அவளின் அழும் முகத்தைப்பார்த்து அவனுக்கு கோவம் தான் வந்தது .

‘ஈஸியா வருதுனு உடனே அழ ஆரம்பிக்காத . எப்போப்பாரு அழுறது . இப்போ என்னடி உன் பிரச்சன . நா உன்ன விட்டு போகனுமா

?'

அவள் பதிலேதும் சொல்லவில்லை. ஒருவாறு கோத்தைக்குறைத்தபடியே மென்மையாக அவளிடம் கூறினான் .

'நா உங்கிட்ட ப்ராமிஸ் பண்ணத மறந்துட்டியா ? உன்ன விட்டு போற நாள் வந்துச்சுனா என் உயிர் என்ன விட்டு போய்டும் அம்மு .'

அவள் இன்னும் அதிகமாய் விசும்ப ஆரம்பித்தாள் .

'எங்கப்பாவுக்கு இது பிடிக்கல '

‘ உங்க அப்பன் பெரிய இவன் . அவனோட பாசம் உன்ன அப்படியே தடுக்குதா ?என்னோட அங்குளுக்குக்கூட தான் இது பிடிக்கல . அதுக்காக நா உன்ன விட்டுட்டேனா ?’

‘உனக்கு அப்பா இருந்தா தெரிஞ்சிருக்கும் ’ என்று யோசிக்காமல் கூறினாள் . அவனோ தலையில் இடி இறங்கியதைப்போல் சிலையாய் நின்றான் . தன்னை ஏறத்தாழ அநாதை என்று கூறிவிட்டாளே என்பதை அவனால் ஜீரனிக்கமுடியவில்லை . அம்மா இல்லாத குறைய தீர்த்தவள் , இன்று நீ ஒரு அநாதை என்று சொல்லாமல் சொல்லியது அவனுக்குள் பெரும் துக்கத்தை வார்த்தது .

கண்களில் தன்னையும் அறியாமல் கண்ணீர் பெருக்கெடுக்க ஆரம்பித்தது .

‘சரி ! நா உன்ன விட்டுப்போறதுதான் உனக்கு சந்தோஷம்னா , உன் சந்தோஷத்துக்காக நா போறேன் ’ என்றவாறு அங்கிருந்து கிளம்பினான் . அவனுக்குள் விவரிக்கமுடியாத துயரம் தாண்டவமாடியது . அவனின் தாய் மட்டும் இருந்திருந்தால் , அவளின் மடியினில் முகம்புதைத்து அழுதுகொண்டே இருந்திருப்பான் . அந்நேரத்தில் கண்ணன் கூட அங்கில்லை . திக்கற்ற வழியினில் மனம் முழுமையும் துயரத்தில் ஆழ்த்தி , கால் போனபோக்கில் பயணிக்க ஆரம்பித்தான் . என்ன பெண் இவள் ? ஒருநாள் வேண்டும் என்கிறாள் , இன்னொருநாள் வேண்டாம் என்கிறாள் .

சுயமாய் முடிவெடுக்கத்தெரியாத முட்டாள் இனத்தைச்சார்ந்தவள் . இவள் படித்துக்கிழித்தால் மட்டும் போதுமா ? வாழ்க்கைச்சார்ந்த ஒரு முக்கியமான முடிவினைக்கூட எடுக்கத்துணிவில்லாத பேடி . என்று ஆள்மனது அவனுக்குள் அவனை சமாதானப்படுத்த முயன்று தோற்றது .

'உனக்கு அப்பா இருந்திருந்தா தெரிஞ்சிருக்கும் ' என்ற குரலே அவனுக்குள் ஒலித்துக்கொண்டிருந்தது . பேருந்து நிலைத்தை அடைந்ததிலிருந்து எத்தனை சி'கரெட் அடித்திருப்பான் என்று சிகரெட்டுக்கேத்தெரியாது . அவன் மனதில் இருக்கும் துக்கத்தைத்தீர்க்க , நுரையீரலுக்குள் கார்பன் படிமத்தையும் பொலோனியம் 210 ஐயும் கிங்ஸின் வழியாக

செலுத்திக்கொண்டிருந்தான் . அவனுக்கு அப்போது தனிமையின் துணை தேவைப்பட்டது .

கல்லூரியில் இருந்த மையலுக்கு நெருப்பின் மேல் அமர்ந்திருப்பது போல் இருந்தது . அவ்வார்த்தையைக்கூறியபின் அவனை விட அதிகமாய் துன்புற்றவள் அவள்தான் . சிங்கப்பூர் மாப்பிள்ளை என்று ஒருவனை அவர் கொண்டுவந்து நிறுத்தியிறா விட்டால் இவ்வளவு தூரம் ஆகியிருக்காது . அன்று அவளின் தந்தைக்கு எதிராய் பெரும்போரேத்தொடுத்திருந்தாள் .

‘எனக்கு மதன் போதும் பா . நீங்கள்லாம் வேண்டாம் . அவனவிட்டு என்னால

இருக்கமுடியாது' என்று தீர்மானமாய் கூறினாள் . அடிக்க வந்த அவளின் தாயின் கையினைத்தடுத்தாள் . அதுவரைப்பொறுமையாய் பார்த்துக்கொண்டிருந்த அவளின் தந்தை அப்படி மட்டும் செய்யாமல் இருந்திருந்தால் , இந்நேரம் மதனின் கையால் தாலிகட்டிக்கொண்டு எங்கேனும் சென்றிருப்பாள் .

'இங்க பாருடி .நீ மட்டும் அந்த பள்ளிப்பையனோட ஓடிப்போன , நாங்கலாம் குடும்பத்தோட தற்கொலைப்பண்ணிப்போம் ' என்றால் அவளின் தாய் .

'நீங்க வாழ்ந்து என்ன பண்ண போறிங்க ?

பெத்த பொண்ணோட மனசுல என்ன இருக்குனு தெரியாம இருக்க நீங்கலாம் வாழ்ந்து என்னத்த சாதிக்கப்போறிங்க ?'

இவளைவிட்டாள் இன்றே கிளம்பிவிடுவாள் என்று முடிவெடுத்த அவளின் தந்தை , யாரும் செய்யாத காரியத்தைத்துணிந்து செய்தார் . எழுந்து வேகமாக மையலிடம் வந்தவர் , சிறிதும் யோசிக்காமல் அவள் காலில் விழுந்து அழ ஆரம்பித்தார் . அதுவரை அவள் மனதில் இருந்த திடம் , சுக்குநூறாய் உடைந்துபோனது .

5.15 பேருந்தில் வழக்கம்போல முன்வாயில் சீட்டில் அவள் கன்னங்கள் வீங்கி அமர்ந்திருந்தாள் . படிக்கட்டில்

தொங்கியவாறு தன் பயணத்தைத்தொடர்ந்துகொண்டிருந்தான் மதன் . இருவருமே பேசிக்கொள்ளவில்லை . இன்னும் ஒரு நிமிடத்தில் மதனின் ஊர் வந்துவிடும் .

'மதன்' என்று அவளின் குரலுக்கு மெல்ல திரும்பினான் . கண்கள் சிவந்து , முகம் வெளிறிப்போயிருந்தான் .

'எனக்கு யாரும் வேண்டாம் . நீ மட்டும் போதும் . இப்பவே என்ன எங்கயாவது கூட்டிட்டுப்போய்டு . ப்ளீஸ் ' என்றாள் . அவள் முகம் கெஞ்சலின் உச்சத்தில் இருந்தது . அவன் மட்டும் சரி என்று சொன்னால் அப்போதே கிளம்பிவிடுவாள் .

அவன் மௌனமாய் இருந்தான் . அருகில் மாலினியோ இன்று நடப்பதை வீட்டினுள் சொல்லக்காத்திருந்தாள் .

'மதன்' என்று மறுபடியும் அவள் அழைக்க திரும்பினான் . ஒருவாறு தீர்மானமாய் கூறினான் .

'சாரி மையல் . எனக்கு என்னோட அங்குள் தான் முக்கியம் . அவரோட பெருமைய எனக்கு புரியவச்சதுக்கு தேங்ஸ் .' என்று திரும்பினான் . அவள் கண்களில் நீர் ஓட ஆரம்பித்தது என்று சொல்லவா வேண்டும் . மதனின் ஊர் வந்துவிட்டது . பஸ் மெல்ல நிற்க ஆரம்பித்தது . மையல் அவனின் கைகளைப்பிடித்துக்கொண்டு கண்ணீரோடு

இருந்தாள் . அவள் கிட்டத்தட்ட அவன் காலைப்பிடித்துக்கெஞ்சும் மனநிலையில் இருந்தாள் . அவனோ தன் மனதில் இருக்கும் காதலை ஓரங்கட்டிவிட முயன்று கொண்டிருந்தான் . அவளே வருகிறாள் , பேசாமல் அவளோடு சென்றுவிடலாம் என்று மனம் ஒருபுறம் அலைபாய ஆரம்பித்தாலும் மறுபுறம் அவளின் தீச்சொற்களும் , முடிவெடுக்கத்தெரியாத சிந்தனையையும் நினைத்து பயந்தான் . கடைசியில் ஒருவாறாய் முடிவெடுத்து அவளின் உயிரை அவனின் கையிலிருந்து பிரித்துவிட்டான் . உயிரற்ற பிணமாய் அவனுடைய ஊரில் இறங்கி முன்னே நடந்தான் . அவளின் சத்தமான அழுகுரல் பேருந்திலிருந்து வந்தது . இவனின் கண்களில் கண்ணீரும் மனதினுள் வலியும் ஒருசேர இருந்தது . பஸ் மெல்ல நகர்ந்தது .அவள் இவனைப்பார்த்து ‘மதன்’ என்று

அழுதவாறே கத்திக்கொண்டு சென்றாள் . ஓடிப்போய் அவள் கண்களில் ஓடும் கண்ணீரைத்துடைக்க , இவனின் புலன்கள் துடிதுடித்தன .

*****

நான்கு வருடங்களுக்குப்பிறகு ,

'செமயா படம் போகுதுல்ல ?' என்றான் பிரபு .

'ஆமா டூட் ' என்று பதில் கூறியவனின் குரல் மதனுடையதுதான் . பிரபு , மதனின்

ஊர்க்காரன் . கண்ணனுக்கும் தேவிக்கும் திருமணம் முடிந்தபின் , கண்ணன் இல்லறவாழ்க்கையில் பிசியானான் . அந்நேரத்தில் பிரபுதான் மதனுக்கு எல்லாமுமாக இருந்தான் .

‘தியேட்டர்ல வந்து இனிமே படமே பாக்கக்கூடாது டூட் .’ என்றான் பிரபு .

‘ஏன் டூட் ’

‘பின்ன . சன்டிவில போடற விளம்பரத்தவிட அதிகமாக போடுறானுங்க .’ என்று சொன்னான் .

வழக்கம்போல இடைவேளை நேரத்தில் செல்லை நோண்ட ஆரம்பித்திருந்தான் மதன் .

'ஹே டூட் . இத நா உங்கிட்ட காட்டிட்டனா ?' என்று ஒரு புகைப்படத்தைக்காட்டினான் மதன் .

'இல்ல டூட் ' என்றவாறே அதைப்பார்த்தான் . ஒரு அழகிய குழந்தை செரலாக் மற்றும் ஜூனியர் ஹார்லிக்ஸின் உதவியால் கொழுக் மொழுக் என்றிருந்தது .

‘நல்லா இருக்குடா பாப்பா ’ என்றான் பிரபு . தொடுதிரையைப்பிடித்து இழுக்க , அந்த படம் ஜூம் அவுட் ஆகி ஒரு குடும்பப்போட்டோவைக்காண்பித்தது . ஒரு ஆண்டி , அவளின் கையில் தன்னுடைய குழந்தையை வைத்திருந்தாள் .

‘யாரு டீட் இது ?’ என்றான் பிரபு .

‘என்னோட மையல்விழி டா . பார்த்தியா ? அவ பேபி எவ்ளோ அழகா இருக்கு . அப்படியே அவளோட கண்ணு . இவ பாரேன் . காலேஜ் படிக்கும்போது விலுவிலுனு இருந்தா . இப்போ என்னடானா நல்லா ஊறிட்டா .கல்யாணமானாலே பொண்ணுங்க பொதபொதன்னு ஆயிடுவாங்க போல .’

என்றான் மதன் .

'டேய் . இவ மொவரைய எதுக்குடா வச்சிருக்க ? அறிவில்ல உனக்கு ?' என்று கோவப்பட்டவாறே திட்டினான் பிரபு . அவனுக்கு மதனின் காதலைப்பற்றி நன்கு தெரியும் . அவள் ,. அவனைவிட்டு சிங்கப்பூர் மாப்பிள்ளையைத்திருமணம் செய்துகொண்டு சென்றால் என்பதனை அறிந்து அவனை விட அதிகமாய்த்துடித்தவன் . திருமணத்தன்று மதன் மெல்லிய சிரிப்பை உதிர்த்தவாறே 'அவ என்னோட மையல்டா . கண்டிப்பா என்ன தேடி வருவா' என்று கூறியதெல்லாம் இன்னும் ஞாபகத்திலிருந்தது .

பிரபுவின் கேள்விக்கு மதன் பதிலேதும்

தெரிவிக்காமல் அந்த போட்டோவையே பார்த்துக்கொண்டிருந்தான் . ஓரளவு கோவத்திலிருந்து வெளிவந்து அவனிடம் கேட்டான் .

'நீ இப்படில்லாம் பன்றதுக்கு பேர் என்னனு தெரியுமா ?' என்று கேட்டான் .

'ம் . தெரியும் டூட் . காதல்' என்று அவன் கூறும்போது தியேட்டரில் படம் போட்டிருந்தார்கள் . அந்த சத்தத்தில் பிரபுவுக்கு மதன் கூறியது காதில் விழவில்லை .

‘என்ன டீட் ’ என்று சத்தமாய் மீண்டும் கேட்டான் பிரபு . மீண்டும் கூறினான் மதன் , கொஞ்சம் சத்தமாக , மனதில் உணர்ச்சி பொங்க

‘காதல் ..................................................................... காதல் ’

——— முற்றும் ———